Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 27 (10:12.2004) வெள்ளிக்கிழமை இதழ்: 71

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக்கொள்ளவும், உறுதி மிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக்கனேஷ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 2486

இல.91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி கொக்குவில். இல.80 கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

## பேச்சுக்கு வருமாறு விடுத்த அழைப்பு குறித்து

# அரசிடமிருந்து பதில் இல்லை; புலிகள் தரப்பு கடும் விசனம்!

(கிளிநொச்சி)

தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனைகளின் அடிப்படையில் நிபந்தனையற்ற பேச்சுக்கு வருமாறு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் நாளன்று விடுத்த அவசர அழைப்புக்கு -

அரசாங்கத் தரப்பிடம் இருந்து இதுவரை எந்தப் பதிலும் அனுப்பப்படாமல் இருப்பது - புலிகளுக்குப் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாக புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

மாவீரர் தினத்தன்று நிகழ்த்திய உரையில் விடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கான அவசர அழைப்பை அரசாங்கம் கருத்தில் எடுக்காமல் உதாசீனம் செய்வது குறித்தே புலிகள் விசனமடைந்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி இன்று வெளியாகும்!

(கொழும்பு)

கடந்த மே மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை யின் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் இன்று வெளியிடப்பட விருப்ப தாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

## நேற்றுமாலை சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - தாண்டவன்வெளியில் நேற்றிரவு பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான தங்கவடிவேலின் மெய்ப்பாதுகாவலராகப் பணியாற்றிய பொலிஸ் கொன்ஸ்டபிளான சின்னத்துரை கைலேஸ்வரன் (வயது 40) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அம்பாறை, மத்திய முகாமைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் மட்டக்களப்பு கல்லடியில் வசித்துவந்தார்.

3 பிள்ளைகளின் தந்தையான இவர் - முன்னாள் புளொட் அமைப்பின் உறுப்பின ராக இருந்து விலகி பொலிஸில் இணைந்து கொண்டவராவார்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினரான தங்கவடிவே லின் மெய்ப்பாதுகாவலராகப் பணியாற்றி வந்த இவர், நேற்றுமாலை 6.45 மணியளவில் தனது வீட்டிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கவடிவேலின் வீட்டுக்கு மோட் டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதே தாண்டவன்வெளி வயோதிபர் வீதியில் இனந் தெரியாதோரால் சுடப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரி யாதோரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமுற்ற இவர் வைத்தியசாலைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் உத்தரவை அடுத்து

# மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு திடீர் வாபஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தரவொன்றைத் தொடர்ந்து ஐக் கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டி ருந்த பொலிஸ் பாதுகாப்பு திடீரென நேற்று அதிகாலை விலக்கிக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றி ஒழுங்குப் பிரச்சினையையும் அவர். எழுப்பினார்.

தனது பாதுகாப்பு திருப்பப் பெறப்பட்டுள்ளமை தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் -

எனது வீட்டை அண்மித்த பகுதிகளில் சிவில் உடையில் ஆயுதம் தரித்தவர்களின் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் காணப்படுகின்றது.இப்படியான சூழ்நிலையில் எனது பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எனது பாதுகாப்பிற்கு ஏதாவது அச்சுறுத்தலோ அல்லது பாதிப்போ ஏற்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமும், ஜனாதிபதியும் தான் ஏற்க வேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

# வீட்டில் தனித்திருந்த யுவதி கத்தியால் குத்தி படுகொலை!

## பருத்தித்துறையில் நேற்று பரபரப்பு



(பருத்தித்துறை)

வீட்டில் தனியே சமைத்துக்கொண்டிருந்த இளம் பெண் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றுப் பட்டப்பகலில் கத்தியால் சரமாரியாகக் குத்திப் படுகொலை செய்யப்பட்டார்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் பருத்தித்துறையில் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

பருத்தித்துறை வி.எம்.றோட்டில் வசித்து வந்த அல்வாய் வடக்கை பிறப்பிமாகக் கொண்ட முரு கேசு எழிலரசி என்ற (வயது -23) இளம் பெண்ணே உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை இவரின் தாயார் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தார். கூடஇருந்த சகோதரி தனது பிள்ளையை ஏற்றிவருவதற்காக பாடசா லைக்குச் சென்றிருந்தார்.

அவ்வேளை வீட்டில் சமையலறையில் மேற்படி யுவதி சமைத்துக் கொண்டிருந்தார். அவ்வேளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விவாதம் – வாக்கெடுப்பின்றி——

# நிதி ஒதுக்கீடுகள் நிறைவேற்றம்; கூட்டமைப்பு எம்.பிக்கள் எதிர்ப்பு!

(கொழும்பு)

குழுநிலைவிவாதம் நடத்தப்படாமல் வாக் கெடுப்பு நடத்தாமல் - இரண்டுபிரதான கட் சிகளின் இணக்கப்பாட்டுடன் ஐந்து அமைச் சுக்கள் மீதான நிதி ஒதுக்கீடுகள் நிறை வேற்றப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து-

நேற்று நாடாளுமன்றம் கூடியபோது சபைக்கு நடுவே நின்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இத னால் நேற்று சபை நடவடிக்கைகள் தடைப் பட்டன.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தலைமையில் நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதமின்றி, வாக்கெடுப்பின்றி இரு பிரதான கட்சிகளின் இணக்கத்துடன் 5 அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரி வித்து இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

காலையில் அவை கூடியதும் படைக்கல சேவிதர் அவை நடவடிக்கைகள் ஆரம்பிக் கும் முன்பாக சபாநாயகருக்கு முன்னால் வைப்பதற்காக செங்கோலை எடுத்துச் சென்ற போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப் பினர்கள் அதனை தடுத்து நிறுத்தினர்.

இதனால் அவையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இதனால் சபை அமர்வு 20 நிமி டங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

"ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்", "நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப் படைஉரிமைகளை பறிக்காதே" உட்பட்ட சில வாசக அட்டைகளை ஏந்தியவாறு முழக் கங்கள் எழுப்பப்பட்டன.

இதனையடுத்து சபாநாயகர் அமர்வை

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-23729623, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR Your friend in the skies...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வி விழா

வாதரவத்தை விக்னேஸ்வராக் கல்லூயின் ஆரம்பக்கல்வி விழா இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி சிவஞான சுந்தரமும், சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்ட ஆரம்பக்கல்வி ஆலோசகர் ந.சுவாமிநாதனும் கலந்துகொள்வர். நிகழ்வுகளின் இறுதி யில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (110)

## நற்கருணை சிற்றாலயம் திறந்துவைக்கப்பட்டது

யாழ்.ஆனைக்கோட்டை அடைக் கல நாயகி ஆலயத்தில் புதிதாக நற்கருணை சிற்றாலயம் ஒன்று கடந்த புதன்கிழமை திறந்து வைக் கப்பட்டது.

இந்த சிற்றாலயத்தை யாழ் குருமுதல்வர் ஜெ.நிக்லஸ் திறந்து வைத்து நற்கருணை எழுந்தேற்றம் செய்து மக்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார். இந்த நற்கருணை சிற்றாலயம் பங்கு மக்களின் ஆதர வுடன் பங்குத்தந்தை ஆர்.நேச ராஜா தலமையில் சிறப்புற அமைக் கப்பட்டுள்ளது.

## தமிழர் ஆசிரியர் சங்க யாழ்.மாவட்ட கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு மானிப் பாய் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட் டத்தில் தாய்ச் சங்கத்தின் சகல நிர்வாகிகளையும், மற்றும் மாவட்ட வலய கோட்ட அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

கரவெட்டி கரணவாய் பொன் னம்பல வித்தியாலய நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழா வும் பாடசாலை மண்டபத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.பொன் னையா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக தொழிலதிபர் ந.பாஸகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வுகளின் இறுதியில் பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன. (12)

## பரிசளிப்பு விழா

உலக எயிட்ஸ் தினக் கட்டு ரைப் போட்டியில் வெற்றி பெற்றோ ருக்கான பரிசளிப்பு விழா இன்று பி.ப 4.00 மணிக்கு கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில் பிரதி சுகாதார சேவை கள் பணிப்பாளர் டொக்டர் ரி.சத்திய மூர்த்தி தலைமையில் நடைபெற வுள்ளது.

# மனித உரிமைகள் தின நிகழ்வுகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையு டன், தீவகம் வடக்கு ஊர்காவற் துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடாத்தும் அனைத்து லக மனித உரிமைகள் தின நிகழ் வுகள் இன்று உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்ட பத்தில் இடம்பெறுகின்றது.

ஊர்காவற்துறை உதவி அர சாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் 'மனித உரிமை களும் மதமாற்றங்களும்' என்கின்ற தலைப்பில் சிவஸ்ரீ.ஜெ.சந்திர காந்தக் குருக்களும் 'இலங்கையில் மனித உரிமைகள்' என்கின்ற தலைப்பில் சட்டத்தரணி எம்.நிறஞ் சனும் 'மனித உரிமைகள் பேண லின் அவசியம்' என்கின்ற தலைப் பில் ஊர்காவற்துறை உதவி அர சாங்க அதிபர் பணிமனை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.சிவராஜாவும் 'இளையதலை முறையினர் மத்தியில் மனித உரிமை விழிப்புணர்வு' என்கின்ற தலைப்பில் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை பண்பாட்டு அலு வலர் இ.நித்தியானந்தனும் கருத்து ரைகளை வழங்கவுள்ளனர்.

## இரசாயனவியல் கருத்தரங்கு

தமிழீழ மாணவர் அமைப்பின் ஒழுங்கமைப்பின்கீழ், கிளிநொச்சி மத்திய கல்லூரியில், நாளை காலை 8.30 மணிக்கு, அடுத்த வருட.ம் ஏப ரல் மாதம் க.பொ.த. உயர்தர விஞ் ஞான பிரிவில் தோற்றவுள்ள மாணவா களுக்கான இரசாயனவியல் கருத் தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கினை யாழ். மாவட்டத்தின் இரசாயனவியல் ஆசி ரியர் அன்பழகன் நடத்தவுள்ளார். எனவே விஞ்ஞான பிரிவில் தோற்ற வுள்ள சகல மாணவர்களையும் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றி பயன்பெறுமாறு மாணவர் அமைப் பினர் கேட்டுள்ளனர்.

## சிறுவர், மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை

கரவெட்டிப்பிரதேச கிராம அலு வல்கள் மற்றும் சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர்களுக் கான சிறுவர் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறும் இந்தப் பயிற்சிப்பட்ட றையில் சிறுவர் மனித உரிமைகள் தொடர்பான கருத்துரைகளை சட் டத்தரணி எஸ்.காண்டீபன் வழங்க வுள்ளார். (13)

# நல்லூர் பிரதேச சபை அறிவித்தல்

**1. படவரைஞராகப் பதிவுசெய்தல் — 2005**

2005ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்யப்பட்டு உள்ளவர்களும் 2004ம் ஆண்டு டிசெம்பர் 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்துகொள்ளவும் மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**2. வியாபார உரிமம் அனுமதிப்பத்திரம் 2005**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2005ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி கொக்குவில்/நல்லூர் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படு கின்றீர்கள்.

**3. ஆதன வரி அறிவித்தல் 2004 நல்லூர் / கொக்குவில் உப அலுவலகங்கள்.**

2004ம் ஆண்டு 4ம் கந்தாயத்திற்கான ஆதன வரியை 31.12.2004ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | 15 % |
| ஏனைய காணிகள் கட்டடங்கள் | 20 % |

நிலுவை உட்பட 2004ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு இல.158 (1) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவீட நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 268இன் பிரகாரமான அறிவித்தல்.**

நல்லூர் பிரதேச சபைகளின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக் குரிய குற்றமென்பதனை அறியத்தருகின்றேன். எனவே கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் ஆகியவற்றுக்கு நல்லூர் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப் பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறல் வேண்டும் என அறியத்தரு கின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

**5. துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமம் பெறல்.**

2005ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31ம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**6. நல்லூர் / கொக்குவில் உப அலுவலக ஆதனவரி அறிவித்தல் 2005.**

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங் களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி விகிதத்தின் பிரகாரம் 2005ம் ஆண்டும் ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2005ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2005ம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10 % கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தில் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5 % கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15 % உம் ஏனைய ஆதனங்களுக்கு 20 % உம் விறாந்துக்கட்டணமாக வரியுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.12.2005ம் திகதிக்கு முன் அந்தந்த அலுவல கங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப் பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**7. சூழல் பாதுகாப்பு.உரிமம்**

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் அவர்களால் 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 28ம் பிரிவின்கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்கீழ் நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகப், பாதுகாப்பு பிரதேசத்தில் 22.11.2000 ஆம் திகதிய 1159/22ம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் 'ஆ' பகுதியில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக இப்பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்குச் சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, சம்பந் தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடனோ அல்லது உப பணிமனையு டனோ தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 01.01.2005 இற்கு முதல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் இரு உப பணிமனைகளிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொன்னையா வைரமுத்து
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை,

08.12.2004 (C/ 3451)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறஞ்சனஸ் சங்கானை
சரத்குமார், நிகிதா நடித்த
சத்ரபதி
(ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
SPIDER MAN - 2

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
(குளிரூட்டப்பட்டது)
இளைய தளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை
(ரீலஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30 (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 [பு.நே]
ஆங்கிலப்படம்
VANHELSING (நகுல படம்)

ராஜா யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
இந்தியாவில் 200 நாட்கள் ஓடிய
வெற்றிச் சித்திரம்
சேரன், சிநேகா, கோபிகா நடித்த
ஆட்டோகிராப்
(ரீலஸ்)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த
அட்டகாசம்
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
அடுத்த வெளியீடு
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
அர்ஜின், லைலா, வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா

# வரவு செலவுத்திட்டம் - 2005

(255ம் அத்தியாயமான) நகரசபை கட்டளைச் சட்டத்தின் 1979ம் ஆண்டின் 13ம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 178(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாக கட்டளை இலக்கம்:05 09.12.2004ம் திகதிய தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2005ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் 10.12.2004ம் திகதி தொடக்கம் ஏழு (7) நாட்களுக்கு அலுவலக நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின் றேன்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
09.12.2004. (C/3453)

திருமதி கு.ஆறுமுகம்
செயலாளர்,
நகரசபை சாவகச்சேரி.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்
ஏற்பாட்டில்
மாபெரும் உதைபந்தாட்டம்
2004.12.10 வெள்ளி பி.ப. 4 மணி
நெல்லியடி ம.ம.வி.
விளையாட்டரங்கு
லண்டன்
சேபிற்றன் அணி
எதிர்
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பருத்தித்துறை
உதைபந்தாட்ட லீக். செயற்குழு
விளம்பர அனுசரணை
ROYAL SPORTS
உதைபந்து, கரப்பந்து, வலைப்பந்து, விளையாட்டுக் காலணிகள்,
சீருடைகள், துருப்பாட்ட உபகரணங்கள்.
"தரமான தெரிவுகள்" "சிறப்புத்தள்ளுபடி"
பருத்தித்துறை சாலை
நெல்லியடி

# அரசாங்கம் - ஜே.வி.பி. முரண்பாடுகளால்

# யுத்த நிறுத்தம் செயலிழக்கும் ஆபத்து!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்களது பங்களிப்புத் தொடர்பாக, ஜே.வி.பிக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நிலவி வருகின்ற கருத்து முரண்பாடு காரணமாக - யுத்த நிறுத்த ஒப்பந்தம் செயலிழந்து வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பேராசிரியர் பீரிஸ் -

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே அனுசரணையாளர்களை உடனடியாக வெளியேற்றவேண்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி நிபந்தனை விதித்துள்ளது. ஆனால, சமாதான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்களது பங்களிப்புத் தொடரவேண்டும் என ஜனாதிபதி விரும்புகிறார். இதனால், ஆளும தரப்புக்குள் பாரிய முரண்பாடு தோன்றியுள்ளது. இதன் காரணமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் உயிர் ஊசலாடுகின்றது. நாளுக்கு நாள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செயலிழந்து வருகின்றது.

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் தோன்றியுள்ள இந்த முரண்பாடே சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்குத் தடையாக உள்ளது.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பித்து இந்த நாட்டில் நீண்ட நாட்களாக நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற அக்கறை ஜனாதிபதியிடம் இல்லை.

ஜனாதிபதி தனது சொந்த அரசியல் நலன்களுக்காக நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றியமைத்து, சபாநாயகர் பதவியை இல்லாதொழிப்பதன் மூலம் நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் முயற்சிகளிலே அக்கறை காட்டிவருகின்றார்.

இது குறித்து எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் 50 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் தெளிவாக விளக்கியுள்ளார். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது திட்டங்களை நிறைவேற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்.

இந்த நாட்டின் மக்கள் மூன்று நேர உணவைக் கேட்கின்றார்கள். ஆனால், ஜனாதிபதியோ மூன்றாம் முறையும் அதிகாரத்தில் இருப்பதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு வருகின்றார். நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றியமைக்க முயற்சிப்பதன்மூலம் ஜனாதிபதி இந்த நாட்டைப் பாரிய நெருக்கடிக்குள் தள்ளிவிடப்போகின்றார்.

ஜே.வி.பி. நோர்வே அனுசரணையாளர்கள், விடுதலைப் புலிகளுக்குப் பக்கச் சார்பாகச் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னரே ஜே.வி.பி. இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் சட்டரீதியற்றது என்றும், அதனை ரத்துச் செய்யக் கோரியும் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. எதற்காக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரி நீதிமன்றம் செல்லவேண்டும்? யுத்த நிறுத்த ஒப்பந்தமானது நாட்டின் நலனுக்குப் பாதகமானது என ஜே.வி.பி. சிந்திக்கின்றதா?

முன்னர் எமது கட்சி ஆட்சியில் இருந்தபோது விடுதலைப் புலிகளது முகாம்கள் பல அமைக்கப்பட்டு வருவதாக அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த தற்போதைய ஆளும் கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளார்கள். ஆனால், அவர்கள் ஆட்சியமைத்த பின்னர் என்ன செய்தார்கள்? விடுதலைப் புலிகளின் மணிராசன்குளம் முகாம் தற்போது அகற்றப்பட்டுவிட்டதா? ஏன்... திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி விடுதலைப் புலிகளால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகாம்கள் அகற்றப்பட்டு விட்டனவா?

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான என்ன நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என நோக்கினால், அது புதிராகவே உள்ளது. இந்த நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கததுக்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது. இது தொடர்பாக அரசுடன் பேசுவதற்கு நாம் தயாராகவே உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவீரர்நாள் நிகழ்வுகள் அமெரிக்காவிலும் அனுஷ்டிப்பு

தமிழீழத் தேசிய மாவீரர்கள் நினைவுநாள் அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் கடந்த சனிக்கிழமை உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

பொதுச்சுடரேற்றல், தமிழ்த் தேசியக் கொடியேற்றல், ஈகச் சுடரேற்றல், அக வணக்கம் போன்ற தமிழீழ சம்பிரதாய முறைகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சிறுவர்களின் அணி வகுப்புடன் கூடிய மலரஞ்சலியைத் தொடர்ந்து பிரியங்கா குமாரின், நடனாஞ்சலி மற்றும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உலகத் தமிழ் அமைப்பின் தலைவர் விஸ்வநாதன், அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைத் தலைவர் பாபு, சிக்காக்கோவைச் சேர்ந்த சிந்தனையாளர் ராம் மோகன், ப.மிருனாளினி, தஞ்சாவூரைச் சேர்ந்த அருட்தந்தை யோன் கென்னடி மற்றும் தமிழகத்தின் இளம் சிந்தனையாளர் அருட்சிதம்பரம் ஆகியோர் சிறப்புரை வழங்க, தமிழீழப் பற்றாளர் சாம்குமார் ஈழத் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் காலம்காலமாக எப்படிச் சிதைக்கப்பட்டன என்பது பற்றி விசேட உரையாற்றி நிகழ்வின் சிறப்பு மலரை வெளியிட்டார்.

நிகழ்வில் - கோடை விடுமுறையில் தான் மேற்கொண்ட யாழ்ப்பாணப் பயணத்தைப் பற்றியும், அங்குள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு எந்த வகையில் உதவமுடியும் என்பது பற்றியும் சரவணன் உரை நிகழ்த்தினார். மாலை 4 மணிக்கு ஆரம்பித்த நிகழ்வுகள், இரவு 8 மணியளவில் நிறைவுபெற்றன.

## நாடாளுமன்றம் செல்ல அனுமதிக்குமாறு சிறை ஆணையாளருக்கு எஸ்.பி. கடிதம்



(கொழும்பு)

இன்று நடைபெறவிருக்கும் சமுர்த்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான வாக்கெடுப்பிலும் விவாதத்திலும் கலந்துகொள்வதற்கு முன்னாள் சமுர்த்தி அமைச்சர் என்ற ரீதியில் தனக்கு அனுமதியளிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கா சிறைச்சாலை ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

இந்த தகவலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ.தே.க. நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் உரையாற்றியபோது தெரிவித்தார்.

எஸ்.பி.திஸநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தண்டனை காரணமாக அரசியல் யாப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய அடிப்படை உரிமைகளை மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரசியல் யாப்புக்குப் புறம்பாக ஜனாதிபதி செயற்படத் தயாராகி வருகின்றார். இதற்கு இடமளிக்க முடியாது.

இதற்கிடையில் தற்போது வெலிக்கடை சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்க கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் தனது மக்களுக்கு சேவையாற்ற அனுமதிக்க வேண்டும்.

அரசியல் யாப்புப்படி [illegible] செய்ய வேண்டும் என அந்தக் கடிதத்தில் அவர் கேட்டுள்ளார்.

# யுத்தத்தை எதிர்கொள்ளும் அளவுக்கு இராணுவத்தின் போராற்றல் விஸ்தரிப்பு

## கடற்படைத் தளபதி தயா சந்தகிரி



(கொழும்பு)

எந்தவிதமான இராணுவச் சவாலை எதிர்கொள்ளவும் கடற்படை தயாராகவுள்ளது என்று முப்படைகளின் தளபதியும், கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

கடற்படையின் 54 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசத்தின் இறைமையைக் காப்பாற்றும் பொருட்டு எமது படையினர் உயர் உஷார் நிலையில் உள்ளனர். கடலில் மட்டுமல்லாது தரையிலும் எமது படையினரின் போரிடும் ஆற்றல் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப்படைப் பிரிவு கடலிலும் தரையிலும் ஒரே வலுவுடன் செயற்படக்கூடியது.

கடந்த காலங்களில் கடற்படையின் சக்தி நவீனரக படைக்கலங்களாலும் யுத்தக் கப்பல்களாலும் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, எமது அண்டை நாடுகள் எமக்கு அளித்துவரும் புலனாய்வுத்தகவல்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் இதர தேவைகளுக்கு நன்றியுடையவர்களாக உள்ளோம்.

ஒரு அரச படை என்ற வகையில் நாம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாகக் கடைப்பிடித்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## அரசியல்துறையினரின் தலையீட்டையடுத்து

# திருமலையில் நேற்று நடைபெறவிருந்த மறியல் போராட்டம் நிறுத்தப்பட்டது!

(திருகோணமலை)

திருகோணமலை பள்ளத்தோட்டம், திருக்கடலூர், உப்புவெளி போன்ற இடங்களிலுள்ள மகளிர் சங்கங்கள் நேற்று நடத்தத் திட்டமிட்டிருந்த போராட்டங்கள் - தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறையினரால் நேற்றுமுன்தினம் இரவு விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து நிறுத்தப்பட்டது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு மகஜர் ஒன்றைக் கையளிக்கவும், புதிதாக அமைக்கப்பட்ட முகாம்கள் தமது வாழ்விடங்களில் நிம்மதியான வாழ்வைத் தொடர்வதற்கு பலத்த இடையூறுகளை ஏற்படுத்தலாம், ஆகையால் அவை உடனடியாக அகற்றப்படவேண்டும் எனக்கோரி போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவும், காலையில் தமது பகுதிகளுக்கு முன்னால் உள்ள வீதியில் சேர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவும் அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

திருமலை நகரில் கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட விரும்பத் தகாத சம்பவங்களைத் தொடர்ந்து இராணுவ முகாம்கள் சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை மக்கள் மத்தியில் பலத்த அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக சிறிமாபுரம் சந்தியில் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டுள்ள முகாம், தமிழ் மக்கள் மத்தியில் சந்தேக உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்ட முகாம்கள் அகற்றப்படவேண்டும் எனக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (01)

### பொலித்தீன், சீனவெடி பாவனைக்கு தடை


இலங்கையில் பொலித்தீன் மற்றும் சீனவெடி பாவனை தடை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு இரண்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இவை அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் எனவும் சுற்றாடல்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

பொலித்தீன் மற்றும சீனவெடி பாவிப்போர்மீது முதலில் பாவிக்க வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்படும் எனவும், அதை அவர்கள் மீறும்போது அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (01)

# யுத்தநிறுத்தத்தின் நன்மைகளை மக்கள் அனுபவிக்கின்றார்களாம்!

## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்



இலங்கையில் யுத்த நிறுத்தம் உறுதியாக உள்ளது. அரசாங்கமும் அதனை செம்மையாகக் கடைப்பிடித்துவருகிறது. அதன் பயன்களை நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மக்கள் அனுப[illegible] காணலாம் என்று [illegible] அமைச்சரும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் புதுடெல்கியில் தெரிவித்தார்.

உலகப் பொருளாதார போரத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்திய பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்தும் புலிகளின் கோரிக்கை குறித்தும் இங்கு கருத்துவெளியிட்ட அவர், தமது அரசு பரந்துபட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முழுமையான தீர்வின் ஒரு அங்கமாக புலிகள் முன்வைத்துள்ள இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவைப் பரிசீலிக்கத் தயார் என்றும் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணலாமா என்பது குறித்த சாதகத்தன்மைகளை ஆராய்ந்து வருகிறோம்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதற்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் அரசு ஒவ்வொரு நடவடிக்கைகளாக மேற்கொண்டு வருகிறது. ஆயினும் இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வை எட்டுவதற்கு எந்த இறுதி இணக்கப்பாடும் காணப்படவில்லை. விடுலைப்புலிகள் பேச்சுக்களை முறித்துக் கொண்டு அமைதி முயற்சிகளிலிருந்து வெளியேறி 18 மாதங்களாகி விட்டன.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அனுசரணைத் தரப்பான நோர்வேயின் ஒத்தாசையுடனும் உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடனும் பலமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புப் பற்றிய பயமே இல்லையென்கிறார் கங்கூலி

(டாக்கா)

பங்களாதேஷில் தமக்கு பாதுகாப்புப் பற்றிய பயம் இல்லை என்று இந்திய கப்டன் கங்கூலி கூறியுள்ளார்.

கங்கூலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி பலத்த பாதுகாப்புக்கிடையே நேற்று முன்தினம் பங்களாதேஷ் சென்றது. பங்களாதேஷ் மண்ணில் காலடி எடுத்து வைத்தால் இந்திய வீரர்களைக் கொல்வோம் என்று பங்களாதேஷ் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர். இதன் காரணமாக இந்திய சுற்றுப் பயணம் ஒருநாள் தள்ளிவைக்கப் பட்டது.

உண்மை நிலையை அறிய 4 பேர் கொண்ட நிபுணர் குழு பங்களாதேஷில் ஆய்வு செய்தது. வீரர்கள் தங்கும் ஹோட்டல், மைதானம், பயணப்பாதை ஆகியவற்றை ஆய்வு செய்த இந்தக் குழு மத்திய அரசுக்கு திருப்திகரமான முடிவை தெரிவித்தது.

இதன்பின்னர், இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷ் செல்ல மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதன்படி இந்திய வீரர்கள் அனைவரும் கொல்கத்தாவில் இருந்து புறப்பட்டு நேற்றுமுன்தினம் பங்களாதேஷ் சென்று சேர்ந்தனர்.

பங்களாதேஷ் விமான நிலையத்தில் இந்திய வீரர்களுக்கு பலத்த பாதுகாப்புடன் வரவேற்பு கொடுக்கப்பட்டது.

விமான நிலையத்தில் இருந்து வீரர்கள் அனைவரும் உடனடியாக ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வீரர்கள் பயணப் பாதையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

வீரர்கள் சென்ற பஸ்கள் முன்னும், பின்னும் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் சென்றனர்.

இந்திய - பங்களாதேஷ் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி டாக்காவில் இன்று நடைபெறவுள்ளது. டாக்காவில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை பங்களாதேஷ் அரசு செய்துள்ளது.

இன்னொரு டெஸ்ட் போட்டி நடக்கும் சிட்டகொங் நகரில் இந்திய ஆய்வுக்குழு இன்னும் சோதனை நடத்தவில்லை. இதன்பின்னர்தான் அங்கு போட்டி நடப்பது குறித்து இறுதியாக அறிவிப்பு வெளியிடப்படும்.

சிட்டகொங் நகரில் ஒருநாள் போட்டி ஒன்றும் நடத்தப்பட உள்ளது. டாக்காவில் இந்திய கப்டன் கங்கூலி நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறுகையில்-




வீரர்களின் பாதுகாப்பு என்பது முக்கியமான பிரச்சினை. ஆனால் இங்கு காலடி வைத்துவிட்டதால் பாதுகாப்பு பற்றிய பயம் எதுவும் இல்லை. இனி கிரிக்கெட் பற்றிய சிந்தனை மட்டும்தான்.

பங்களாதேஷ் அணி டெஸ்ட் போட்டியில் பெரிய சாதனைகள் எதையும் செய்யாதபோதும் நாங்கள் குறைவாக மதிப்பிடவில்லை. எதிர்த்து மோதும் அனைத்து அணிகளுக்கும் ஒரே விதமான மரியாதை கொடுக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

லண்டன் சேபிற்றன் அணிக்கும் பருத்தித்துறை லீக் அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று இன்று பிற்பகல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (12)

# பிறேசில் உதைபந்து வீரர் பலி; மோதிய கோல் கீப்பர் நீக்கம்!

(கொல்கத்தா)

பெங்களூரில் நடந்த பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் (கோவா) அணி 2-0 என்ற கோல் கணக்கில் மோகன் பகான் (கொல்கத்தா) அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

இந்தப் போட்டியில் 2 கோல்கள் அடித்த பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ ஜுனியர் 3 ஆவது கோல் அடிக்க முயற்சித்தபோது மோகன் பகான் கோல் கீப்பர் சுப்ரதா போலால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

அப்போது நிலைகுலைந்து கீழே விழுந்த கிறிஸ்டியானோ வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் இறந்துபோனார்.

இதுதொடர்பாக கோல் கீப்பர் சுப்ரதா போல் மீது புகார் எழுந்தது. இந்த நிலையில் அவரை அகில இந்திய உதைபந்தாட்ட சங்கம் இடைநிறுத்தம் செய்துள்ளது.

அவர் 20 ஆம் திகதிக்குள் விளக்கம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் 'நான் வேண்டுமென்று கிறிஸ்டியானோ மீது மோதவில்லை' என்று சுப்ரதா போல் மறுத்துள்ளார்.

# இந்திய அணி வீரர்கள் புத்துணர்ச்சியுடன் உள்ளனர்

## பயிற்சியாளர் ஜோன் ரைட்

இந்திய அணி புத்துணர்ச்சியுடன் இருப்பதாக பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்துள்ளார்.



சொந்த மண்ணில் தொடர்ந்து நடந்த போட்டிகளில் கலந்துகொண்ட இந்தியா தற்போது பங்களாதேஷுடன் மோதவுள்ளது. இதற்காக பங்களாதேஷ் சென்ற இந்திய பயிற்சியாளர் ஜோன் ரைட் நிருபர்களிடம் கூறுகையில் -

வெளிநாட்டு மண்ணில் ஆட இந்திய வீரர்கள் புத்துணர்ச்சியுடன் காத்திருக்கிறார்கள். அவுஸ்ரேலியாவுடன் டெஸ்ட் தொடரைக் கோட்டை விட்டது துரதிஷ்டவசமானது. வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் தொடரில் வெற்றிபெற்றோம். அதுபோல் பங்களாதேஷிலும் வெற்றி தொடரும் என்றார்.

## விளையாட்டு

# காயமுற்ற குத்துச்சண்டை வீரர் நான்கு நாட்களின் பின் மரணம்



(பனாமா)

பனாமாவில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் பாந்தம் வெயிட் பிரிவில் கொலம்பிய வீரர் கார்லோஸ்மோயாவும் - பனாமா வீரர் ரிக்கார்டோ போவும் மோதினர்.

இதில் ரிக்கார்டோ விட்ட குத்துக்களால் கார்லோஸ் தடுமாறினார். 12 ஆவது சுற்றில் கார்லோஸ் 'நொக் அவுட்' செய்யப்பட்டார். ரிக்கார்டோ விட்ட குத்துகளில் அவர் தலையில் காயமடைந்து மைதானத்திலேயே சுருண்டு விழுந்தார்.

மூளையில் அவருக்குப் பாதிப்பு ஏற்பட்டது. உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

கோமா நிலையில் இருந்த கார்லோஸ்மோயா 4 நாட்களுக்குப் பிறகு ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார். அவரது மரணம் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

26 வயதான அவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. உலக குத்துச்சண்டை தர வரிசைப் பட்டியலில் கார்லோஸ் 14 ஆவது வரிசையில் உள்ளார்.

# ஆசியாவின் மிகச்சிறந்த உதைபந்தாட்ட அணியாக ஜப்பான் தெரிவாகியது!

(கோலாலம்பூர்)

ஆசியாவின் சிறந்த உதைபந்தாட்ட அணியாக ஜப்பான் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சிறந்த வீரருக்கான விருதை ஈராக்கின் அலி கரிமி தட்டிச் சென்றார்.

ஆசிய உதைபந்தாட்ட கூட்டுக்குழு ஆண்டுதோறும் ஆசியாவில் சிறந்து விளங்கும் அணி மற்றும் வீரர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது.

இந்த ஆண்டிற்கான ஆசியாவின் சிறந்த வீரர் தேர்வு மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், ஈராக்கின் அலி கரிமி தேர்வுசெய்யப்பட்டார்.

இவர் ஆசிய கிண்ணப் போட்டியில் 5 கோல்கள் அடித்துள்ளார். கடந்த ஆண்டும் ஈராக்கைச் சேர்ந்த மெடி மடவிகியா என்பவரே இவ் விருதைத் தட்டிச் சென்றார். சிறந்த அணிக்கான விருதை ஜப்பான் தட்டிச் சென்றது. கடந்த ஓகஸ்டில் நடந்த ஆசியக் கிண்ணப் போட்டியில் ஜப்பான் 3-1 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் கைப்பற்றியது. கடந்த ஆண்டு இந்த விருதை ஈராக் பெற்றது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அணிக்கான விருது சீனாவுக்குக் கிடைத்தது. ஆசியாவின் சிறந்த அணியாக சவுதி அரேபியாவின் அல் - இத்திஹாத் தெரிவாகியுள்ளது.

இதைத் தவிர, சிறந்த இளம் வீரருக்கான விருதை பார்க் சூ யங் (தென்கொரியா), சிறந்த பயிற்சியாளராக அட்னன் மஜித் (ஈராக்)தும், சிறந்த வீராங்கனையாக ஹோமாரி சவா (ஜப்பான்) பெண்களுக்கான சிறந்த அணிக்கான விருதை சீனாவும் பெறுகின்றன.

# ஹொக்கி சம்பியன்ஸ் டிரொபியில் பாகிஸ்தானிடம் இந்தியா தோல்வி



சம்பியன்ஸ் டிரொபி ஹொக்கித் தொடரில் இந்திய அணி பாகிஸ்தானிடம் 1-2 என்றகோல் கணக்கில் தோல்வி அடைந்தது. ஸ்பெயின் அணியை வீழ்த்திய ஹொலன்ட் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

பாகிஸ்தான் - லாகூர் நகரில் ஆறு நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் டிரொபி ஹொக்கித் தொடர் நடைபெற்று வருகிறது. இந்திய - பாகிஸ்தான் அணிகள் இடையிலான விறுவிறுப்பான ஆட்டம் நேற்று நடந்தது. சொந்த மண்ணில் விளையாடுவதால் பாகிஸ்தான் அணி அதிக வலுவுடன் காணப்பட்டது.

கடந்த போட்டியில் ஜேர்மனியை வீழ்த்திய நம்பிக்கையுடன் இந்திய வீரர்கள் களமிறங்கினர். இரு அணி வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பாகிஸ்தான் வீரர்களின் தாக்குதல் ஆட்டத்திற்கு இந்திய இளம் வீரர்கள் தாக்குப் பிடித்து விளையாடினர்.

ஆட்டத்தின் 32 ஆவது நிமிடத்தில் பாகிஸ்தானின் சக்லைன் முகமட் முதல் கோல் அடித்தார். இதனால் முதல் பாதியில் பாகிஸ்தான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் களமிறங்கிய இந்திய அணிக்கு, சந்தீப் சிங் கைகொடுத்தார்.

இவர் 58 ஆவது நிமிடத்தில் அபாரமான கோல் அடித்து ஆட்டத்தைச் சமன் செய்தார். இதனால் ஆட்டம் சமநிலையில் முடியுமென எதிர்பார்த்த நிலையில் சொகைல் அபாஸ் அதிர்ச்சி அளித்தார். இவர் 67 ஆவது நிமிடத்தில் வெற்றிக்கான கோல் அடித்தார்.

இறுதியில் இந்தியா 1-2 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்தது.

இந்தத் தொடரில் இந்திய அணி விளையாடிய நான்கு போட்டிகளில் பெறும மூன்றாவது தோல்வி இது. இதனால் 3 அல்லது 4 ஆவது இடத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் இந்திய அணிக்குக் குறைந்துள்ளது.


பாகிஸ்தான் மூன்று வெற்றிகளுடன், ஒன்பது புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது. இதன்மூலம் பாகிஸ்தான் இறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

மற்றொரு போட்டியில் நடப்புச் சம்பியனான ஹொலன்ட், ஸ்பெயின் அணியை எதிர்த்து விளையாடியது.

இதில் அபாரமாக ஆடிய ஹொலன்ட் 4-2 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதன் மூலம் ஹொலன்ட் அணி விளையாடிய நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்று, 12 புள்ளிகளுடன் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது. ஸ்பெயின் அடுத்ததாக பாகிஸ்தானைச் சந்திக்கவுள்ளது.

இதில் வெற்றிபெறும் அணி இறுதிப் போட்டியில் ஹொலன்டைச் சந்திக்கும்.

ஜேர்மனி - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.



போதைப்பொருள் பாவித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பல்கேரியாவின் முன்னாள் ஒலிம்பிக் பழுதூக்கும் சம்பியனான போவஸ்கிக்கு எட்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர் இந்தத் தீர்ப்பை ரத்துச் செய்யுமாறு மேன்முறையீடு செய்தபோதும் அது நிராகரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி மற்றும் சூழல் பாதுகாப்புக்கு மக்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைப்பதில்லை

## வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர்

எமது பிரதேச அபிவிருத்திக்கு அரசாங்கத்திடமிருந்து குறைந்தளவு நிதி ஒதுக்கீடே கிடைக்கிறது.

இந்தப் பணத்திலிருந்து பல தேவைகளையும், அபிவிருத்திகளையும் மேற்கொள்ளவேண்டிய தேவை பிரதேச சபைகளுக்கு இருக்கின்றபோதும், இந்த அபிவிருத்தி மற்றும் சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு பொதுமக்களிடமிருந்து போதிய ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை என, வலி.தெற்குப் பிரதேச சபை செயலாளர் சரஸ்வதி சொக்கலிங்கம் தெரிவித்தார்.

குறிப்பாக வீதிகள், சிறு ஒழுங்கைகள் அபிவிருத்தி செய்யவில்லை என மக்கள் எமக்குக் கையொப்பப் பிரதிகளைச் சமர்ப்பிக்கின்றனர். நாம் அவர்களின் வேண்டுதலுக்கு முன்னுரிமை கொடுத்துப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது, அகலம் குறைவாகவும், விபத்துக்கள் ஏற்படக்கூடிய அதிக திடுமுட்டான திருப்பங்களைக் கொண்ட ஒழுங்கைகளை இரண்டு அடி அகலமாக இடம் விட்டுக்கொடுக்கும்படி கேட்டால், அதற்கு காணி உரிமையாளர் ஒத்துழைப்பதில்லை.

இதேபோலவே தமது காணிகள் சுத்தமாக இருந்தால் சரி, பொதுப் போக்குவரத்துப் பாதை எவ்வாறு அசுத்தமடைந்தாலும் பரவாயில்லை என்ற நினைப்பில், கழிவுப் பொருட்களை தெருக்களில் வீசுகின்றனர்.

குப்பைகளைத் தமது வளவுகளில் உள்ள மரங்களுக்கே பசளையாகப் பயன்படுத்திப் பயன் பெறலாம். பிளாஸ்ரிக் பொருட்களை ஒரு மூலையில் தீமூட்டி எரிக்கலாம். உடைந்த போத்தல் துண்டங்கள், தகரங்களைக் குழிவெட்டிப் புதைத்தால் எவருக்கும் தீங்கு ஏற்படாது.

இவற்றைச் செய்வதை விடுத்து, எடுத்ததற்கெல்லாம் பிரதேச சபைகளையும், சுத்திகரிப்புத் தொழிலாளர்களையும் குறைகூறுவதை மக்கள் தவிர்க்கவேண்டுமென அவர் மேலும் கேட்டுக்கொண்டார். 101)

### திருப்பள்ளி எழுச்சிநூல் இலவசமாக வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தில் - இந்து ஆலயங்கள், இந்து இளைஞர் மன்றங்கள், பாடசாலைகள் ஆகியவற்றுக்கு திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சிப் புத்தகங்கள் மற்றும் மாணிக்க வாசக சுவாமிகளின் படம் என்பனவற்றை வழங்கி வருகிறது.

தேவையானவர்கள் கே.கே.எஸ் வீதியிலுள்ள மில்க்வைற் சோப் தொழிலகத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தொழிலதிபர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழா சிறப்பாக நடைபெற்றது

(நெடுந்தீவு)


நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வு நெடுந்தீவு மகா வித்தியாலய உள்ளக அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைவர் சு.கோபாலசிங்கம் தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்றது.

நிகழ்வில் மங்கள விளக்கை யாழ்.மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் கருணன், நெடுந்தீவு பிரதேச பொறுப்பாளர் செ.ரங்கன், முன்னாள் கல்விப் பணிப்பாளர் இரா.சின்னத்தம்பி, யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - (கணக்காய்வு) பொ.சிவலிங்கம் மற்றும் மதகுருமார் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஆசியுரைகள் மற்றும் வாழ்த்துரைகளும் இடம்பெற்றதுடன், ஆக்கத்திறன் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள், அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கச் செயலாளர் மு.கனகலிங்கத்தின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தன. (113)





தமக்கு இதுவரை வழங்கப்படாதிருக்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்கக் கோரி வரணி இயற்றாலை மற்றும் தாவளை இயற்றாலை பகுதி மக்கள் யாழ். செயலகம் முன்பாக நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# உரும்பிராயில் கசிப்பு வேட்டை பெருமளவு கசிப்பு கோடா மீட்பு

உரும்பிராய் மேற்கு அன்னங்கைப் பகுதியில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தி நிலையங்களைக் கடந்த திங்கட்கிழமை கோப்பாய் பொலிஸார் முற்றுகையிட்டு, பெருமளவான கசிப்பு மற்றும் கோடாஎன்பவற்றைக் கைப்பற்றினர்.

இந்தப் பகுதியிலுள்ள சனசமூக நிலையத்தினரும், பொது மக்களும் இணைந்து கிராம அலுவலகரின் உதவியுடன் பொலிஸார் நடத்திய தீவிர கசிப்பு வேட்டையின்போது, பலரின் வீடுகள் முற்றுகையிடப்பட்டன. இதன் போதே பெருமளவு கசிப்புடன் உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸாரின் தீவிர வேட்டையின்போது, ஒரு குழுவினரிடமிருந்து 20 போத்தல் கசிப்பும், 25 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டன.

இந்தப் பகுதியில் அடிக்கடி பொலிஸாரால் சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து இரவு நேரங்களில் இந்தப் பகுதிகள் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையிலான குழுவினரால், இரவுநேர ரோந்து நடவடிக்கையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. (82)

# பொது நூலகத்தில் இறுவட்டு நூலகம் அமைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தில் இறுவட்டு நூலகப் பிரிவு உருவாக்கும் முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த நூலகம் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் நிறைவடைந்துள்ளதாகவும், அடுத்தகட்டமாக இதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் யாழ்.பொது நூலக நூலகர் தெரிவித்தார்.

யுனெஸ்கோவின் நிதியுதவியுடன் உருவாக்கப்படும் இந்தத் திட்டம் - இன்னும் சில மாதங்களில் வெற்றியளிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யுனெஸ்கோவின் நடமாடும் நூலகம் ஒன்றும் யாழ். பொது நூலகத்தில் ஜனவரிமாதம் அளவில் செயற்பட இருப்பதாகவும் யாழ்.பொது நூலகர் தெரிவித்தார்.

# மிதிவெடி அபாயத்தை விளக்கும் தீனக் குழந்தைகள் நாடகம்

## பாடசாலைகளில் மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் யுனிசெப் நிதியுதவியுடன், அரங்கினூடாக மிதிவெடி கல்வியூட்டல் செயற்திட்டத்தின் கீழ், செயற்திறன் அரங்க இயக்கத்தால் 'தீனக் குழந்தைகள்' என்ற பாடசாலைச் சிறுவர்களுக்கான நாடகம் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் மேடையேற்றப் பட்டு வருகிறது.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் 8 பாடசாலைகள் வீதம், 112 பாடசாலைகளில் மேடையேற்றப் படவுள்ள தீனக் குழந்தைகள் நாடகம் - இதுவரை 40 பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டுள்ளது.

மிதிவெடியால் பாதிக்கப்பட்ட சிறுவன் - எப்படி மனதளவிலான பாதிப்பிலிருந்து விடுபடுகிறான் என பதை, சிறுவர்களுக்கு ஏற்றவகையில் ஆடல், பாடல்களுடன் கிராமத்து விளையாட்டுக்களையும உள்ளடக்கியதாக கதையம்சங்களைக் கொண்ட இந்த நாடகத்தில், 15 இளைஞர் - யுவதிகள் பங்குபற்றுகின்றனர்.

'நெஞ்சுறுத்தும் கானல்', 'அடிசுடும் அனல்வெளி', 'முடக்கம்', 'இடர்கள்' போன்ற நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்த தே.தேவானந்த் - தீனக் குழந்தைகள் நாடகத்தையும் நெறியாள்கை செய்துள்ளார்.

மிதிவெடி, வெடிபொருட்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்த நாடகம் - தீவகம், வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டு வருகிறது.

தீனக் குழந்தைகள் நாடகத்தை விடியோப்படம் பிடித்து, அவற்றுடன் மிதிவெடி தொடர்பான பொருட்களின் காட்சிகளையும் இணைத்து, தொலைக்காட்சி மூலமாக வெடிபொருட்கள் தொடர்பான கல்வி அறிவை வழங்கவுள்ளதாக நிறுவன இயக்குநர் தே.தேவானந்த் தெரிவித்தார். (91)

### தமிழ் மொழித்தினப் போட்டி ஜனவரிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டி - ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் தமிழ்த்துறைப் பிரிவு அறிவித்துள்ளது.

வட-கிழக்கில் நிலவிவரும் கால நிலை சீரின்மையாலேயே இந்தப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், இந்தப் போட்டியை ஜனவரிமாத நடுப்பகுதியில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை நான்கு



பெயர் : இ.அஜெய்நாத்
முகவரி : கைதடி.


### சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்

(கோப்பாய்)

கிராமிய மட்டத்திலான சுற்றாடல், பாதுகாப்புக் குறித்து - இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் சுற்றாடல் பாதுகாப்பு சபையின் பிரதிநிதிகளுக்கும், கிராம அலுவலர்களுக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. (90)

# டிமிக்கி விட்ட திருடன் காரைநகரில் சிக்கினார்

நீண்டகாலமாகப் பல திருட்டு, கற்பழிப்புச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த திருட்டு சந்தேகநபர் - காரைநகரில் வைத்து பொதுமக்களின் உதவியுடன் பொலிஸாரால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது - இவர் சுழிபுரம், குடத்தனை மேற்கு, மானிப்பாய், வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் திருட்டு, கற்பழிப்புச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தார்.

இவரைப் பிடிக்க நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் காரைநகரில் சைக்கிளில் சென்ற ஒருவரிடம் பணத்தையும், சைக்கிளையும் திருடிச் சென்றுகொண்டிருந்த சமயம், காரைநகர் பொலிஸார் துரத்திச் சென்று, பொதுமக்களின் உதவியுடன் மொந்திபுலப் பகுதியில் வைத்து இவரை மடக்கிப் பிடித்தனர். இவரிடமிருந்த சைக்கிளையும், பணத்தையும் உரியவரிடம் ஒப்படைத்த பின்னர் - வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பர உற்சவ கால ஏற்பாடுகளுக்கான கூட்டத்தில் -

ஆலய உற்சவங்களில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற வாய்ப்பு இருப்பதாகவும், பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டுமென்றும் நிகழ்வில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரி கேட்டுக்கொண்டார். (52)


வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இரு மனங்கள் இணைந்த இல்லற வாழ்க்கையே இனிக்கும்

## சிநேகிதியே

மகிழ்ச்சியான வாழ்வு என்பது நாங்களாக ஏற்படுத்திக் கொண்ட வாழ்வு முறையாகும். இந்த வாழ்வில் துன்பங்கள், இன்பங்கள் மாறிமாறி ஏற்படுகிறது. இப்படியாக மாறி மாறி ஏற்படும்போது, ஒன்றை மட்டும் நாங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எப்படியான துன்பங்கள் வந்தாலும், அதை எமக்காக வந்த விபத்து என்று நினைத்துக்கொண்டு, அந்தத் துன்ப விபத்தை இயலுமான வரை இன்பமாக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு பழகிக் கொள்வதால் வாழ்வு மென்மேலும் வளரும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு குடும்பத்திலுள்ள கணவன், மனைவி, பிள்ளைகள் இவர்களுக்கிடையில் பல பல மாற்றங்கள் உண்டு. எங்களுடைய கையின் 5 விரல்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆனால், ஒன்றாகத்தான் செயற்படுகின்றன. அதில் ஒருவிரல் இல்லாத போது கூட கஷ்டமாக இருக்கிறது. இப்படியாகத்தான் குடும்ப வாழ்விலும் ஒன்றாக நிற்கவேண்டும்.


வாழ்வில் நிறையப் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும். அந்தப் பிரச்சினைகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு வித்தியாசமாக இருக்கின்றபோது அவற்றை தீர்க்கும் முறையும், வித்தியாசப்படுகிறது. அதாவது ஒவ்வொரு வீட்டிலும் வருமானக்குறைவு, சம்பளம் போதாமை, வருமானத்துக்கு மிஞ்சிய செலவு என்ற ரீதியில் ஒவ்வொரு குடும்பமும் வெவ்வேறான வருமானத்தை மாதக் கடைசியில் பெறுகின்றனர். ஆகவே ஒவ்வொரு குடும்பமும் அதற்கேற்ப செலவைச் செய்யவேண்டும். முக்கியமாக வரவு என்பதை கணக்கில் வைத்து, செலவு செய்தல் வேண்டும். வருமானத்துக்கு குறைவிருக்காது. இதனால் வருமானப் பிரச்சினை குடும்பங்களில் இல்லாமல் போய்விடுகிறது.

ஒரேவீடு, ஒரே தொழில் செய்யும் அலுவலகம், ஒரே மனிதர்கள் கூடுதலாக பழக்கப்படும்போது, பிரச்சினைகள் தானாக வருகிறது. ஒரே வீட்டில் இருப்பதால் சலிப் படையலாம். விடுமுறை நாட்களில் வேறொருவர் வீட்டுக்குச் சென்று வருவதால் இந்தப் பிரச்சினை இல்லாமல் போய்விடுகிறது.

தொடர்ந்து ஒரே இடத்தில் தொழில் செய்வதாலும் எந்தவித மாற்றமும் இல்லாது தொழில் செய்யும் அலுவலகங்களில் வேலை செய்வதாலும், சலிப்படையலாம். ஆகவே மாதத்துக்கு அல்லாவிட்டாலும், வருடத்துக்கு ஒருதடவை மாற்றங்கள் செய்வதால் புதிதாகத் தொழில் செய்வது போல சுறுசுறுப்பாக எந்த நாளும் இருக்கின்ற போது, வாழ்வு புதுப்பொலிவுடன் விளங்கும்.

தொடர்ந்து ஒரே மனிதர்களுடன் பழகுவதால் ஒருவருக்கொருவரின் பெறுமதி தெரியாமல் போய்விடுகிறது. இதனால் பழகும் தன்மை குறைந்து கொண்டு செல்கிறது. புதிய புதிய மனிதர்களுடன் பழகும்போது, எல்லோருடனும் உறவு பிரிவுக்கு இடமிருக்காத போது எல்லோருடனும் உறவு பிரிவுக்கு இடமிருக்காதபோது, அவர்களுக்கிடையே யுள்ள எந்தப் பிரச்சினையும் இல்லாமல் போய்விடுகிறது.

அடுத்தது நிறைய விடயங்களை அறிய வேண்டும். அதேவேளை விடுமுறை நாளிலாவது எமது ஊரைவிட்டு ,தூர இடங்களுக்குச் சென்று வரும்போது, மனதில் ஆறுதல் ஏற்படுகிறது. தனிமை, தூர இடப் பயணம் போன்ற காரணங்கள் வாழ்வில் அமைதியை ஏற்படுத்தும்.



நாங்கள் நினைப்பவை நடப்பதில்லை. ஏனெனில், எங்களுடைய தகுதிக்கு மேலதிகமாகக் கிடைக்கும் என்று நினைக்கிறோம். கஷ்டத்தின் மத்தியில் கிடைக்கின்றபோதுதான், எந்தப்பொருளுக்கும் அதன்பெறுமதி தெரிகிறது. அவ்வாறு பெறுமதியான பொருள், இலகுவாகக் கிடைக்கின்றபோது, பொருளுக்கு பெறுமதி கிடைப்பதில்லை. இதனால் இலகுவாக கிடைக்கின்ற எதுவும் எந்தவிதமான அனுபவமும் ஏற்பட வாய்ப்பில்லாதபோது மட்டுமே வாழ்வு கசப்பாகிறது.

எமது தேவைகள் குறைவாக இருக்கின்ற போது, கூடுதலாகச் சிந்தித்துச் செயலாற்ற முடியாத எந்தத் திட்டத்திலும் இறங்கிவிட்டு, அவஸ்தைப்படும் நிறையப் பேர்கள் உண்டு. இதனால் நட்டப்பட்டு கடைசியில் வீட்டில் உள்ள அனைத்து சொத்தையும் இழந்தும், நடுத்தெருவில் நிற்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே தேவைகளுக்கு அதிகப்படி யோசிக்கும்போது அந்தத் தேவைகளுக்கு அதிகமாக எங்களிடம் இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் எந்தத் திட்டமும் கைகூடும். ஆகவே, வாழ்வு எந்த இடங்களை கடக்கின்றபோது நாலு சந்திகள் வரத்தான் செய்கிறது. நாங்கள் செல்லும் திசையில் எங்களுக்கு சார்பான வீதியால் செல்வதால் ,வாழ்வு இனிமையாகிறது. ☆☆☆☆☆☆

# பிறந்த குழந்தையும் நோய்களும்





(சென்றவாரத் தொடர்ச்சி...)

### பொய்ப் பல்

சில குழந்தைகள் பிறக்கும்போதே, பல்லுடன் பிறக்கின்றன. இதற்காக கவலைப் படாதீர்கள். இதனைப் பொய்ப் பற்கள் என்று சொல்கிறோம். இது போல யூலியஸ் சீசர், துளசிதாசர், நெப்போலியன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள். பாற்பற்கள் முளைக்கத் தொடங்குவதற்கு முன்னதாக இந்தப் பொய்ப்



பற்கள் தானாகவே விழுந்து விடுகின்றன. ஆனால், பல் ஆடிக் கொண்டிருந்தாலோ அல்லது தாய்ப்பால் கொடுக்கும்போது, மார்பகங்களில் காயம் ஏற்படுத்தினாலோ வைத்தியரிடம் சொல்லி நீக்கி விடுவது நல்லது.

### பிமோசிஸ்

பத்து ஆண் குழந்தைகளுள், எட்டு ஆண் குழந்தைகளுக்கு இது காணப்படும். இவர்களுக்கு ஆண்குறியின் முனைப்பகுதி முன் தோலால் மூடியிருக்கும். இதனை எளிதாகப் பின்னே தள்ளிவிட முடியாது. இவ்வாறு ஏற்படுவதால் சிறுநீர் கழிப் பதில் எந்த விதமான பிரச்சினையும் ஏற்படாது. குழந்தைக்கு என்ன இப்படி இருக்கின்றதே என்று நினைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாக முன் தோலை பின்னே தள்ளி விட முயற்சிக்க வேண்டாம். அப்படி வலுக் கட்டாயமாகச் செய்ய முயற்சிப்பதால் அது காயம் ஏற்பட வாய்ப்பாகும்.

### பிசுயோலாஜிக்கல் ஜாண்டிஸ்

இந்த வகை மஞ்சள் காமாலை வழக்கமாக குழந்தை பிறந்த முதல் நாள் முடிந்ததும், தெரிய ஆரம்பிக்கும். ஆனால் 7 ஆவது நாளில் மறைந்து விடும். பைலுருபின்களின் அளவு 10 மில்லி கிராம் என்ற அளவுக்கு மேல் போகக் கூடாது என்பது முக்கியம்.

### சின்னமுத்து

சின்னமுத்து நோய் என்பது வாரிசிலா – சோஸ்டர் என்ற வைரஸ் கிருமியின் தாக்கத்தால் ஏற்படுகிறது. இந்த நோயுள்ளவர் களுக்கு – காய்ச்சல் கொப் பளங்கள், கொப்பளங்களில் கடி போன்ற அறிகுறிகள் காணப் படும்.

இந்த நோய் ஆரோக்கியமான குழந்தைக்கு வருவதில்லை. இது சின்ன வயது குழந்தைகள் மற்றும் வயதானவர்களுக்கு வரலாம். தொற்றிப் பரவக்கூடிய வகையைச் சேர்ந்த இந்த நோய் – மிகவும் ஆபத்தானது. ஆனால், உயிராபத்தை ஏற்படுத்துவதில்லை. நேரத்தையும், பண இழப்பையும் ஏற்படுத்துகிறது. ஏனெனில் நோய்வாய்ப்புக்குள்ளான குழந்தைகள் நிறையப் பாடசாலை நாட்களை வீணடித்துக் கொள்ள வேண்டி வரும். அது போல பெற்றோர்கள் தங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்காக நிறைய வேலை நாட்களை வீணடித்து, பணவிரயத்தை ஏற்படுத்துகிறது.

### அறிகுறிகள்


பெரும்பாலும் இந்த நோய் வந்தால், காய்ச்சல் உடலெங்கும் கொப்பளங்கள், வெடிப்பு, கடி, வாந்தி, அருவருப்பு போன்ற அறிகுறிகள் தென்படும். பெரும்பாலும் கொப்பளங்கள் அதனைக் கொண்டு இந்த நோயை அடையாளம் காணலாம்.

### பரவும் விதம்

இந்த நோய் தொற்று நோய் ஆகும். இந்த நோய்குள்ளானவர்கள் தும்மும் போதும், எச்சில் துப்பும் போதும் அதிலுள்ள வைரஸ் கிருமிகள் அடுத்தவர்களுக்குத் தொற்றலாம். சில வேளைகளில் கர்ப்பிணித்தாய் மூலம், கருவில் இருக்கும் குழந்தைக்கும் அல்லது பிறந்த குழந்தைக்கும்கூடத் தொற்றலாம். நேரடி தொடுதல் மூலம் இந்த நோய் பரவும் வாய்ப்புள்ளது.

### பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள்

இந்த நோயால் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் – குழந்தைகள், வயது வந்த ஆண்கள்



பெண்கள் என யாரையும் விட்டு வைக்காது. கூடுதலாகக குழந்தைப் பருவம் அல்லது வயது வந்த பருவத்தில் இந்த நோய் வரலாம். ஆனால், குழந்தைப் பருவத்தில் சின்னமுத்து நோய் வராதவர்களுக்கு, வயது வந்த பருவத்தில் கட்டாயம் வரும் வாய்ப்பு உண்டு. பெரும்பாலும் சிறுகுழந்தைகளையே இந்த நோய் அதிகமாக பாதிக்கிறது. இதைவிடக் குழந்தைகளுடன் கூடுதலாகப் புழுகும் ஆசிரியர்கள், குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களை நடத்துபவர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதிகள், வைத்தயசாலை ஊழியர்கள் ஆகியோருக்கும் பரவலாம். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு முகத்தின் தேடல்

எல்லோரும் முண்டியடிச்சுக்கொண்டு வேகமாக நடக்க, எனக்குக் கால் வலிக்கிறது. இந்தச் சனம் இவ்வளவும் போய் முடிய, நேரம் போய்க்கொண்டிருந்தது. எல்லாம் இந்த மயூரியால் வந்தது. 3 மணிக்கே வெளிக்கிட்டிருந்தால் இப்ப இப்படிக் கஷ்டப்படத் தேவையில்லை. அவளுக்கு அலங்காரம் பண்ண 2 மணித்தியாலம்தேவை. எங்கை போறதெண்டாலும் இப்படித்தான். எல்லா உடுப்பையும் போட்டுக் கழட்டி, பிறகு போட்டுப் பார்த்து அவள் வெளியிலை வர எவ்வளவு நேரம்! இண்டைக்கும் இப்பிடித்தான்; எல்லோரும் மத்தியானம் 1 மணிக்கே சாப்பாட்டை முடிச்சு 1 .30 மணிக்கே பஸ் பிடிக்கிறதெண்டு நேற்றுத் திட்டம் போட்டது. அக்காமார் இரண்டுபேரும் நேரத்துக்கு வெளிக்கிடுவினம்.

பெரியக்கா அவள் ஒரு ஞானி! அம்மா அரை ஞானி! வீட்டை வாறவை எல்லோரும் இப்பிடித்தான் சொல்லுவினம். பெரியக்கா சிரிக்கமாட்டா. நான் பிறந்தபோது அவளுக்குத் திருமணம் நடந்ததாம். காதல் கலியாணம் எண்டு சொல்லிச்சினம்! ஆனால் அத்தானை நான் காணவில்லை. கலியாணப் படமும் எங்கட வீட்டிலை இல்லை. கலியாணம் முடிய வெளிநாடு போனவராம். பிறகு ஒரு செய்தியும் இல்லையாம். பெரியக்கா ஒவ்வொரு நாளும் தபால்காரனை ஆவலோடை எதிர்பார்ப்பா. நம்பிக்கையோடை சைக்கிள் மணிச்சத்தத்தைக் காத்து நிற்பா. ஆனால் அவவுக்குக் கடிதம் கொடாமல் தபால்காரன் எங்கடை வீட்டைத்தாண்டிப் போவான். அக்காவின்ரை முகம் வாடிப் போகும். பேசாமல் சாமியறையிலைபோய்க் கும்பிடுவாள். பிறகு எங்கடை உடுப்புகளையெல்லாம் அள்ளிக்கொண்டுபோய்க் கிணத்தடியிலை போட்டுத் தோய்ப்பாள். நான் சிலவேளை போய்நிண்டு பாப்பன். உடுப்பு அலம்பக்கை அக்கா மௌனமாகக் கண்ணீர் விடுவாள். அத்தான் ஏன் இப்பிடிக் கடிதம் போடாமல், தொடர்பு இல்லாமல் இருக்கிறாரே! என்ன மனுசன் பாவம் அக்கா!...

என்ன சிலுக்கு! கெதியா நடந்து வாடி! சின்னக்காதான் என்ரை கையைப்பிடிச்சு இழுத்தாள். அவள்தான் எனக்குச் சிலுக்கு எண்டு பெயர் வைச்சவள். நான் எப்பவும் டான்ஸ் ஆடிப் பாப்பன். தொலைக்காட்சியிலை வாற ஆட்டங்களை எல்லாரும் வாயைப் பிளந்து பாத்துக்கொண்டிருப்பினம். நான் அந்த ஆட்டத்தை ஆடிப் பழகிக்கொண்டிருப்பன். எனக்குப் பரதநாட்டியம் பிடிக்காது. பிறேக் டான்ஸ் தான் நல்லவிருப்பம். எனக்குச் சிரிப்பு வந்தது. அண்டைக்கு ஒருநாள் தொலைக்காட்சியிலை டான்ஸ் நடந்தது. எங்கடை முன்வீட்டுப் பாலனும், ரமணியும் வந்து பார்த்துக்கொண்டிருந்தவை. நான் அவையட்டைச் சொன்னன்! நீங்களும்



ஒருக்கா ஆடிப் பாருங்கோவன் எண்டு. ரமணி உடனை ஆடத்தொடங்க, பாலனும் எழும்பி ஆட, நானும் தொடர்ந்து ஆடினேன். திடீரெனப் பாலன் காற்சட்டை சர்... என்று கிழிய எல்லோரும் சிரிச்சினம். அவனுக்கு வெக்கமும், துக்கமும்! பாவம் அழத்தொடங்கினான். பெரியக்காதான் அவனைக் கூட்டிக்கொண்டுபோய் உடுப்பு மாற்றி விட்டாள். அதுக்குப் பிறகு அவன் வீட்டை தொலைக்காட்சி பார்க்க வாறதில்லை.

இப்ப சின்னக்காவின் கைப்பிடி கொஞ்சம் இளகியது. எனக்கும் கால் வலித்தது. நான் அம்மாவைத் தேடினேன். அவ முன்னுக்குப் போய்க்கொண்டிருந்தா. பெரியக்கா எங்கை? நான் திரும்பிப் பார்த்தேன். எல்லாம் சனம்தான். என்ரை உயரத்துக்குச் சுடிதாரும், சீலையும், வேட்டியும், காற்சட்டையும்தான் தெரிஞ்சுது. இப்ப சின்னக்காவின்ரை கையைப் பிடிக்கவேணும். சின்னக்கா!... நான் தேடினேன். அவள் போட்டிருந்த பச்சைப் பஞ்சாபி... என் கண்கள் தேடின. ஐயோ! எத்தினை பஞ்சாபி, எத்தினை சுடிதார்! எத்தினை அரைப் பாவாடை! எங்கை தேடுறது? சனம் வரவர நெருக்கியடிக்குதுகள். நான் பெரியக்கா எண்டு கூப்பிட்டன். காணவில்லை. ஒலிபெருக்கியின் அறிவிப்புச் சத்தத்திலை ஒண்டும் கேக்காது.

என்னை யாரோ இடிச்சினம்!... இதென்ன ஒண்டு நிண்டு காலுக்கை இடறுப்படுது சனியன்! எனக்கு ஒரு வாழ்த்துப்பாடல். நான் கொஞ்சம் றோட்டோரம் போக, பக்கமாகத் திரும்பினேன். இன்னொரு பூதம் என்னைத் தள்ளிக்கொண்டு முன்னே போனது. நான் துள்ளி விலக, என்ரை ஒரு செருப்புக் கழண்டு விட்டுது. குனிஞ்சு செருப்பை எடுக்கவிடாமல் சனம் சாரி சாரியாக நடக்க, நான் மற்றக் காலின்ரை செருப்பைக் கழட்டிக் கையிலை எடுத்தன். இனி என்ன செய்யிறது? அம்மா! என்குரல் ஓங்கினாலும் ஒலிபெருக்கி விடவில்லை. எனக்குப் பயம் வந்துவிட்டுது. விழுந்துவிடாமல் இருக்க எதையாவது பிடிக்கவேணும் போலை இருந்தது. ஒரு சீலைத் தலைப்பு என்ரை கைக்கு எட்ட அதை இழுத்துப் பிடிச்சன். என்ரை முயற்சி வீண்போகவில்லை. அந்தச் சீலைத்தலைப்பு நிண்டுது. நான் நிமிர்ந்து பார்க்க சீலைக் குரிய முகமும் குனிந்தது. ஆர்பிள்ளை! இந்தச் சனத்துக்கை நெரியப் போறாய். இஞ்சை வா! அந்த முகத்துவாய் சொல்லிக் கொண்டே என்னைத் தூக்கிக்கொண்டது. நடக்கத் தொடங்கியது.

அப்பாடா! கடவுள் என்னைக் காப்பாற்றி விட்டார். ஆனால் யாரிது? என்ரை மனம் கேட்டது. அந்த அம்மா சொன்னா! பிள்ளை இப்ப கதைச்சுக்கொண்டிருந்தால் எங்களை இடிச்சு விழுத்திப்போடுவினம். உள்ளை போனாப்பிறகு பாப்பம். நான் ஒன்றுமே பேசவில்லை. முன்னும் பின்னும் வரும் முகங்களிடையே அம்மாவையும், பெரியக்காவையும், சின்னக்காவையும் தேடத் தொடங்கினேன். அந்த முகங்கள் கண்ணுக்குத் தென்படவேயில்லை. என்னைத் தூக்கியபடி நடந்த அம்மாவும் கொஞ்சம் களைச்சுப்போனா. இப்ப வாசலுக்குக்கிட்ட வந்துவிட்டோம். அந்த அம்மா என்னைத் தூக்கியபடி கொஞ்சம் வேகமாக நடந்தாள். இதோ வாசல் வந்துவிட்டது. நேரமும் நெருங்கிவிட்டது. ஒலிபெருக்கியின் அறிவிப்புக் கேட்டது. எல்லோரும் உங்களுக்குரிய இடத்துக்கு விரைந்து செல்லுங்கள்! நாங்களும் உள்ளே வந்துவிட்டோம். திடீரென வந்த கும்பல் ஒன்று எங்களைத் தள்ள, நானும் அம்மாவும் விழுந்தோம்.

பாதையின் ஓரத்தில் பள்ளத்தில் அம்மா! நான் அவளருகே... அவள் கையிலிருந்த பொருட்களை என்னிடம் தந்தாள். மோனை! என்னாலை... அசைய முடியவில்லை. நீ உள்ளேபோய் இதை நிறைவேற்று. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால்... ஒருபொறுப்புத் தரப்பட்டதை உணர்ந்தேன். நாங்கள் வீட்டிலை பேசினது நினைவுக்கு வந்தது. உவ்வளவு சனமும்போய் என்ன செய்யுது எண்டு ஒருக்காப் போய்ப்பார்க்க வேணும். சின்னக்கா சொன்னபோது பெரியக்கா சொன்னாள் நீ பகிடி பண்ணாதையடி! அதுவும் கோயில்தான்! இப்ப நான் அந்தக் கோயில் கடமையை நிறைவேற்ற வேணும்.

சுற்றுமுற்றும் தேடினேன். ஒரு அண்ணா ஓடி வந்தான் பிள்ளை! நீ எங்கை போகவேணும்? நான் அந்த அம்மா தந்த பொருட்களை அவனிடம் கொடுத்தேன். அவன் மளமளவென்று பிரிச்சுப் பார்த்தான். என்னையும் ஒரு முறை பார்த்தான். ஓ! இந்தப் பிஞ்சு!... அவன் வியப்புடன் என்னை அலாக்காகத் தூக்கிக்கொண்டு நடந்தான். நான்... என்ன செய்வது?... ஓரிடத்தில் அவன் நின்றான். என்னைக் கீழே இறக்கிவிட்டார். அது மாவீரன் நடுகல். அந்த அண்ணா என்னைக் கீழே இருத்தினான். பையில் இருந்த மாலையை எடுத்தந்து என்னைப் போடும்படி சொன்னான். நான் அந்த மாலையை வாங்கினேன். என்னளவு உயரமான மாலை. என்னால் போட முடியவில்லை. அவனும் என்னுடன் சேர்ந்து மாலையைப் போட்டான். வெள்ளை மலர்களைத் தந்து தூவச் சொன்னான். இப்போ எனக்கு விளங்கி விட்டது. நான் வணங்கிக்கொண்டே மலர்களைத் தூவினேன். அதில் எழுதப்பட்ட பெயரைப் படித்தேன். இளங்கோ செல்வ நாயகம்... பிறந்ததினம்!... 14.10.1970 மாவீரனான தினம் 14.10.1997. ஓ!... என்ரை பிறந்தநாள் சாம்பிராணிக் குச்சைக் கொளுத்தினேன்... அந்த அண்ணா கையைக் குவித்து மௌன மாக அஞ்சலி செய்தான். பாடல் ஒலித் தது!... அவன் என் கையிலே நெருப்புக் குச்சியைக் கொழுத்தித்தர நான் சற்று, கால்களை எம்பி நுனிக்காலில் நின்று சுடரை ஏற்றினேன். சுடர் பற்றி எரியத் தொடங்கியது. நானும் கண்ணை மூடி வணங்கினேன். திடீரெனப் பெரியக்காவின் குரல் ஐயோ! என்ரை ராசா... நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தன். அக்கா!... நீ... ஒரு மாவீரன் மனைவி!... அந்த அண்ணா அக்காவின் கைகளைப் பற்றிச் சொன்னான். நான்தான் சுரேஸ். இதை உங்களுக்குத் தரவேண்டும். கண்ணனின் கடைசி ஆசை இன்றுதான் நிறைவேறுகிறது. அக்கா அதை வாங்கினாள். அது அவள் ஒவ்வொருநாளும் எதிர்பார்த்த கடிதம். ***********

# குனிந்து வேலை செய்தால்...

பெண்களுக்கு அதிகமாக ஏற்படும் வலி முதுகுவலி. இதற்குக் காரணம் பெண்களுக்கு இருக்கும் அதிகமான வேலைதான். சாதாரண முறையில் ஒரு குடும்பத்தலைவி தினமும் 100 முதல் 150 முறை வேலைக்காகக் குனிந்து நிமிரும்போது. இயல்பாகவே முதுகுவலி தோன்றி விடுகிறது. முதுகுவலிக்கு இது மட்டும் காரணம் அல்ல. பெரும்பாலும் பெண் ஆனாலும். ஆண் ஆனாலும் உட்காரும்போது சரியான முறையைக் கடைப்பிடிப்பதில்லை. கூன் விழுந்த நிலையிலோ. ஒரு புறமாகச் சரிந்த நிலையிலோதான் அமர்கிறார்கள். இதுவும் முதுகுவலியைத் தோற்றுவிக்கும். குனிந்தபடியோ. சரிந்த படியோ அமர்ந்திருக்கும்போது தசைகளில் இறுக்கமும் ஒருவித அசாதாரண நிலையும் ஏற்படுகிறது. இதனால் முதுகுவலி தோன்றுகிறது.



இயற்கையாகவே பெண்களுக்குக் கர்ப்பகாலத்தில் முதுகுவலி ஏற்படுகிறது. சிசு கர்ப்பப்பைக்குள் வளருவதால் ஏற்படும் இறுக்க நிலையே இத்தகைய முதுகுவலிக்குக் காரணமாகிறது. இதுமட்டுமன்றி. கர்ப்பகாலத்தில் பிரசவம் எளிதாக அமைய உடலில் ஒருவகை ஓமோன் சுரக்கிறது. அது எழும்புகளை ஓரளவு மென்மையாக்குகிறது. அதனாலும் முதுகுவலி தோன்றும். அதிகமான நிறையால் — குதிக்கால் பகுதியில் அதிக உயரமான செருப்பு அணிவதாலும். முதுகுவலி தோன்றுகிறது. முதுகுவலி வந்த பின்பு. மருத்துவ உதவி பெறுவதைவிடச் சரியான வாழ்க்கை முறைப் பழக்க வழக்கங்கள் மூலம் முதுகுவலியே வராமல் தடுப்பதே சிறந்தாகும்.

அலுவலகங்களிலோ. வீடுகளிலோ இருக்கைகளில் சரியான முறையில் அமர வேண்டும். தொடர்ச்சியாக அதிகநேரம் அமர்ந்திருக்காமல் எழுந்து சிறிது நேரம் நடக்க வேண்டும். உணவில் பால். தானிய வகைகள் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். முதுகை வளைத்து குனியாமல் முட்டை மடக்கி குனிந்து வேலை செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். ☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# மொட்டவிழும் போது



*ஒரு சிறுமி பெண்மையடைவதும், பூப்பெய்துலும் எந்தக்கால கட்டத்தில் நிகழ்கின்றன. இவற்றை மாற்றியமைக்கக்கூடிய இயல்பான காரணங்கள் –*

- பூப்பெய்தல் நிகழ்வு 10 – 16 வயதில் நிகழக்கூடும். இலங்கைப் பெண்களின் பூப்பெய்தும் வயது சராசரியாக 12 – 16 வரையாகக் காணப்படுகிறது. ஒரு சிறுமியின் மார்பக வளர்ச்சி ஆரம்பிக்கத் தொடங்குகின்ற வயதிலிருந்து இரண்டு வருடங்களில் பூப்பெய்தல் நிகழ்கிறது.
- வயதுக்கு அதிகமான உயரமும், உடல் நிறையுமுள்ள பெண்கள் விரைவில் பூப்பெய்துகிறார்கள்.
- வம்சாவளியான மரபணுக்களும் இதை நிர்ணயிப்பதுண்டு. சிறுமியின் சகோதரிகள் பூப்பெய்திய வயது வரம்பிலேயே அநேகமாகப் பூப்பெய்தக்கூடும்.
- நல்ல ஊட்டமும், சத்துமிகுந்த உணவுப் பழக்கங்களைக் கொண்ட சிறுமிகளும், வளர்ச்சியுள்ள சமுதாய – பொருளாதார சூழ்நிலையில் வளர்ந்த சிறுமிகளும் விரைவில் பூப்பெய்தல் உண்டு.
- சுற்றுப்புற சீதோஷ்ண நிலைமைகள், எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை.

*பூப்பெய்துதல் சராசரி வயதைவிட முன்னதாக இருப்பதற்கான அசாதாரண அல்லது உடல் சம்பந்தமான காரணங்கள்*

- ஒரு சிறுமி எட்டு வயதுக்கு முன்பே பூப்பெய்துதல் அசாதாரண நிகழ்வு ஆகும். 4 வயதில் பெண்மையுறுதல் நிகழ்வுகூட மருத்துவ அறிக்கையில் உள்ளது.
- வயதுக்கு முன்பாகவே மார்பக வளர்ச்சியும், பெண் உறுப்பில் வளர்ச்சியும் ஒரே சமயத்தில் ஆரம்பிக்கத் தொடங்கி, பூப்பெய்துதல் விரைவில் பூப்பெய்தும் சிறுமிகளில் 75 சதவிகிதமானோருக்குக் காணப்படுகிறது.

இவ்வாறு விரைவில் பூப்பெய்தும் பெண்களுக்குப் பெரும்பாலும் சினை முட்டைகள் வெளிப்பட்டுவரும் மாதவிடாய், இது மாதவிடாயிலிருந்தே ஆரம்பிக்கக்கூடும். இந்தச் சிறுமிகள் உடல்ரீதியாக 15 வயதுப் பெண்ணையும், மனரீதியாகச் சிறுமியாக இருத்தல் மிகவும் வருந்தத்தக்க விடயம்.

இயல்பாக, பூப்பெய்தும் எல்லாப் பெண்களுக்கும், உயரத்தை நிர்ணயிக்கக்கூடிய நீள எலும்புகளின் இரு முனைகளிலும் பகுதி மூடப்பட்டு வருகின்றன. எனவே பெண்களின் வளர்ச்சி 90% தேக்க நிலையை அடைகிறது. இதற்குக் காரணம் பெண்ணிய ஓமோன்கள் படிப்படியாக உயர்ந்து, காணப்படுவதால் விரைவாகப் பூப்பெய்திய சிறுமிகளின் உயரம் குறைவாக இருக்க நேரிடும்.

விரைவில் பூப்பெய்துலுக்குக் காரணமான உடல் கோளாறுகள்.

- தைரட்டு சுரப்பி அளவு குறைவாக இருத்தல்
- நரம்பு சம்பந்தமான நோய்கள், மூளையில் ஏற்படும் பிறக்விகுறைகள், மற்றும் கட்டிகள்.
- ஈஸ்ட்ரோஜன் ஓமோனைச் சுரக்கும் தன்மைவாய்ந்த கட்டிகள் கற்பப்பையில் ஏற்படுவதால்.
- அட்ரீனல் சுரப்பியில் ஏற்படும் கட்டிகள், இதனால் பாதிக்கப்படும் சிறுமிகள் பூப்பெய்திய பின், மெல்ல மெல்ல ஆண்மைத்தனம் குறிக்கும். உடல் மாற்றங்கள் (முகத்தில் முடி, ஆண்மை கலந்த குரல்) ஏற்படக் கூடும். *************************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணியங்குளம், விநாயகர் குடியிருப்பு மக்கள் அடிப்படை வசதியற்ற நிலையில் வாழ்கின்றனர்

கிளிநொச்சி - அக்கராயன் பிரதேசத்திலுள்ள மணியங்குளம். விநாயகர் குடியிருப்பு மக்கள், அடிப்படை வசதியற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

1999 ஆம் ஆண்டு கிளிநொச்சி அரச அதிபரால் குடியமர்த்தப்பட்ட இந்த கிராம மக்கள் - மழை காரணமாக வீதிகள் சீரில்லாத நிலையிலும், வீட்டின் சுவர்கள் இடிந்து விழும் நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர்.

உலக உணவுத் திட்டத்தின் கழ் இந்தக் கிராமத்தின் வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்ட போதிலும், இதன்போது மக்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணங்கள் இன்னும் வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்துக்கென போரூட் நிறுவனத்தால் பொதுக்கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், இந்தக் கிணற்று நீர்குடிநீராகப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இதைவிட, அண்மையில் கிராமிய அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் - வீடு வேய்வதற்கென ஒவ்வொரு குடும்பததுக்கும் ஈர்க்கு, கயிறுகள் உட்பட 150 மட்டை கிடுகுகளும் வழங்கப்பட்டன.

விவசாயக் கடனாக ஒருவருக்கு 10 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் வரையான பணம் வழங்கப்பட்டது.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றால், 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவில்லாத பொருட்கள் 168 பேருக்கு வழங்கப்பட்டன.

ஏ.எம்.டி.ஏ. நிறுவனத்தால் மாதத்தில் இரண்டு திங்கட்கிழமைகளில் சுகாதார சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக சிறு சிறு உதவிகள் அவ்வப்போது கிடைப்பதைத் தவிர்த்து, நிரந்தரமான வசதிகள் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

இந்த கிராமத்தில் சொந்தக் காணிகள் அற்றவர்களும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மீளக்குடியமர முடியாத குடும்பங்களுமாக, சுமார் 70 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# வவுனியா நகரப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

வவுனியா நகரப் பகுதியிலும், அதை அண்டிய பிரதேசங்களிலும் மீண்டும் திருட்டுகள் அதிகரித்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வவுனியா குடியிருப்புப் பகுதியில் இரண்டு வீடுகளில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் வைரவர் புளியங்குளம் பகுதியில் மாலைநேரம் தனியாகச்சென்ற வயோதிபப் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி திருடப்பட்டது. இதேபோல் பண்டாரிகுளம் பகுதியிலும் சங்கிலி திருடப்பட்டது.

அண்மை நாட்களாகத் திருட்டுத் தொடர்பான சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து, திருட்டுகள் குறைந்து காணப்பட்டதாகவும், தற்போது மீண்டும் இது தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

வவுனியா - ஓமந்தை மத்திய கல்லூரி கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேர்வு நிலையம் வவுனியா, புளியங்குளம் இந்துக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஓமந்தை மத்திய கல்லூரியில் பரீட்சை எழுதும் மாணவர்கள் புளியங்குளம் இந்துக் கல்லூரி அதிபரிடம் தொடர்புகொண்டு, பரீட்சையில் பங்குபற்றுமாறு, பரீட்சை இணைப்பாளர் மு.யோகநாதன் கேட்டுக்கொள்கிறார்.

## ஒரே நேரத்தில் பரீட்சை

நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை - அனைத்துப் பரீட்சை நிலையங்களிலும் ஒரேநேரம் ஆரம்பமாகவுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் அனைத்திலும் புதிய நேரம் 9 மணிக்கு அதாவது - தாயக நேரம் 8.30 மணிக்குப் பரீட்சைகள் ஆரம்பமாகும் என வவுனியா, துணுக்காய், மன்னார், மடு ஆகிய கல்விவலய வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையினரின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையால் நடத்தப்படும் மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இடைநிறுத்தி வைக்கப்பட்ட இநதப் போட்டிகள் - நாளை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. சுற்றுப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட அணிகள் காலை 8 மணிக்கு கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்துக்கு வருகை தருமாறு, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ராஜா தெரிவித்தார்.

## கால்நடைகளின் தொல்லை அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார், இலுப்பைக்கடவை, பாப்பாமோட்டை ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் காலபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை உரிய முறையில் பராமரிக்காமையால், பெருமளவான பயிர்களை இந்தக் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன.

# பஸ் போக்குவரத்து சீரின்மையால் மக்கள் பெரும் சிரமமடைகின்றனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் இடையிலான பஸ் போக்குவரத்து சீரின்மையால், மக்கள் பயணிப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஸ்கந்தபுரம், கோணாவில், ஊற்றுபுலம் சந்திகளில் மக்கள் காத்து நிற்பதையும், அப்படி நின்றாலும் சனநெரிசலுடன் வரும் பஸ்கள் குறிப்பிட்ட மக்களை ஏற்றாமல் செலகின்றன.

இதனால் உள்கிராமங்களிலிருந்து வரும் பயணிகள் ஏமாற்றத்துடன், வீடு திரும்புவதையும், குறிப்பிட்ட நேரத்துக்கு தமது தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாமலும் பெரும் அசௌகரியங்களை மேற்கொள்கின்றனர்.

நோயாளிகள் வைத்தியசாலை செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சம்மந்தப்பட்டவர்கள் இதில் கவனம் செலுத்தி, ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் உப அலுவலகம் குடத்தனையில் இயங்குகின்றது

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் உப அலுவலகம் ஒன்று குடத்தனையில் இயங்கி வருகிறது.

இந்த அலுவலகம் ஒவ்வொரு மாதமும் வரும் முதலாம், மூன்றாம், ஐந்தாம் வியாழக்கிழமைகளில் இந்தப் பகுதியில் இயங்கி வருகிறது.

இந்த உப அலுவலகம் இயங்கத் தொடங்கியுள்ளதால், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 5 கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்கள் - தங்கள் தேவைகளைச் சுலபமாக நிறைவேற்றக் கூடியதாக உள்ளது.

இதற்கு முன்னர் முகமாலை ஊடாக மருதங்கேணி சென்று, அங்கிருந்த மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலேயே தங்களது தேவைகளை நிறைவு செய்து வந்துள்ளனர்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒரு பகுதி இராணுவக் கட்டுப்பாட்டிலும், மிகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. (14)

# நிரந்தர வசதி எதுவுமின்றி கோணாவில் கிராம மக்கள்

(கிளிநொச்சி)

கோணாவில் - காந்திக்குளம், யூனியன்குளம் ஆகிய கிராமங்கள் மிகவும் பின்தங்கிய கிராமங்களாகக் காணப்படுகிறது.

இந்தக் கிராமத்துக்கான புனரமைப்புகள் எதுவும் இதுவரையில் எந்த நிறுவனத்தாலும் மேற்கொள்ளப படவில்லை.

இந்தக் கிராமங்களில் 680 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்குள்ள வீதிகள் அனைததும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் மக்கள் நீண்ட காலமாகப் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கிராமத்து மக்களின் வீடுகள் அனைத்தும் தற்காலிகக் குடிசைகளாகவே காணப்படுகின்றன.

இந்தப் பகுதி மக்களுக்கென 25 மலசலகூடங்கள் அமைத்து கொடுப்பதாக, கிராமிய அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒரு தொகுதி மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுமுள்ளன.

# தமிழீழ காவல்துறை போக்குவரத்துப் பிரிவினரால் வீதிப்போக்குவரத்து தொடர்பான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அமைந்துள்ள பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நடுவகப் பணியகத்தில் - தமிழீழ காவல்துறையின் வாகனப்போக்குவரத்துப் பிரிவினரின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை - பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கல்லூரிப் பொறுப்பாளர் கொலின்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்துரைகளை, வாகனப் போக்குவரத்துப் பொறுப்பாளர் சிவகுமாரன் நிகழ்த்தினார். மேலும் இதுவரை ஏ-9 வீதியிலும், அதனை அண்டிய வீதிகளிலும் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பான புகைப்படங்களும் காண்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெண்கள் அபிவிருத்திக் கல்லூரியின் பணிமனைப் பணியாளர்கள், பயிற்சிபெறும் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் கருத்துரைகளை இந்தக் கல்லூரியின் பயிற்சி ஆசிரியை சுதா வழங்கினார்.

இதேபோன்று விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கோவிந்தன் கடைச்சந்திப் பகுதியிலும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தனியார் கல்வி நிலைய மாணவர்கள், அந்தப் பகுதி மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 65 சிறந்த விவசாயிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்க திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் சி.ஆனந்தராசா தலைமையில் இடம்பெற்றது.

# பொது அமைப்புகளால் வழங்கப்பட்ட நிதி வேறு இடத்துக்கு

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளின் வீதிகளைப் புனரமைப்பதற்கென பொது அமைப்புக்களால் ஒதுக்கப்பட்ட நிதி வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த வீதிகள் சுமார் 20 வருடங்களாகப் புனரமைக்கப்படவில்லை. இந்தப் பகுதியால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது பொது அமைப்புக்களால் சில வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறு வீதிப் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட 65 லட்சம் ரூபா நிதியே உயர் அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

# தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மருத்துவமனை புதிதாக அமைக்கப்பட்டும், மக்களின் தேவைகளை நிறைவு செய்யமுடியாத நிலை காணப்படுகிறது.

இந்த மருத்துவமனை இரண்டு கோடி 80 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு, மாவட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

ஆனால், இங்கு ஒரு மருத்துவர் மட்டும் கடமையாற்றி வருவதுடன், வெளிநோயாளர் பிரிவு மட்டுமே இயங்கி வருகிறது.

இங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய சாதாரண நோயாளர்கள்கூட, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கோ அல்லது யாழ்ப்பாண மருத்துவமனைக்கோ செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

# பெண்களுக்கான தொழில்சார் பயிற்சிநெறி கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்களுக்கான தொழில்சார் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் - பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஜனவரி மாதம் இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் - தையல், கணினி, தலையலங்காரம், பூவேலை, பன்னவேலை போன்ற பயிற்சி நெறிகள் ஆறுமாத காலத்துக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சியைப் பெறவிரும்பும் யுவதிகள் - தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக, பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளபபடுகின்றனர்.

இந்த தொழில்சார் கற்கைநெறிகள் அனைத்தும் இலவசமாகக் கற்பிக்கப்படுவதுடன், பயிற்சிக்கான பொருட்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளதென, பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இன்னொரு சிங்களத் திணிப்பு !

பொது நிகழ்வுகளின் போது தேசியக் கொடி (சிங்கக் கொடி) கட்டாயம் ஏற்றப்படவேண்டும் என்று அரசாங்கம் கட்டாய நிபந்தனை ஒன்றை விதித்திருப்பது - பல்வேறு சர்ச்சைகள், சந்தேகங்களைத் தோற்றுவித்திருக்கிறது.

திடீரென அரசாங்கம் எதற்காக இப்படியொரு உத்தரவைப் பிறப்பித்தது என்ற கேள்வி இங்கு எழுகிறது. நாட்டின் தேசியக் கொடிக்கு நாட்டு மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் இயல்பாகவே இருக்க வேண்டும்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை அதன் தேசியக் கொடி இன்றுவரை அனைத்து மக்களின் அபிலாஷைகளையோ அல்லது அவர்களின் சிந்தனைகளையோ பிரதிபலிப்பதாக இல்லை. சிறுபான்மை இனத்தையிட்டு சற்றும் கவனத்தில் கொள்ளாமல் இந்தத் தேசியக் கொடி வடிவமைக்கப்பட்டிருக்கிறமை குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்டதொரு நிலையில் நாட்டின் தேசியக் கொடி - அனைத்து இன, மத, மக்களினதும் மதிப்பையும் பெற முடியாது போய்விட்டது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரை இலங்கையின் தேசியக் கொடி என்று சொல்வதைவிட - அதனைச் சிங்கக் கொடி என்று சொன்னால்தான் தெரியும் என்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது.

அந்தளவுக்கு நாட்டின் தேசியக் கொடி சிறுபான்மை மக்களிடமிருந்து அந்நியப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டதொரு நிலையில் கட்டாயம் பொது நிகழ்வுகளில் தேசியக் கொடி ஏற்ற வேண்டும் என்று அரசாங்கம் விடுத்திருக்கும் உத்தரவும் முக்கியத்துவம் பெறுகிறது.

இயல்பாகவே மதிப்பும், மரியாதையும் வைக்க வேண்டிய நாட்டின் தேசியக் கொடியை - கட்டாயமாக ஏற்ற வேண்டும் எனக் கூறும் அளவுக்கு அது அந்நியத்தன்மை வாய்ந்ததாகி விட்டது.

குறிப்பாக தமிழ் மக்கள் இந்தச் சிங்கக் கொடியைக்கண்டாலே வெறுக்கும் நிலையில் இருக்கின்றபோது – பொது நிகழ்வுகளில் அதனை ஏற்றுமாறு கட்டாயப்படுத்துவது பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கப் போகிறது.

பொது நிகழ்வுகளில் சிங்கக் கொடி ஏற்றப்படாது விட்டால் அந்த நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துமாறு பொலிஸாருக்கு விடுக்கப்பட்டிருக்கும் உத்தரவுதான் இப்போது ஏற்படப்போகும் பாரிய பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கப் போகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை சிங்கக் கொடியை தமது தேசியக் கொடியாக மனப்பூர்வமாகவோ, வரலாற்று ரீதியாகவோ ஏற்றுக் கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இப்படியான நிலையில் தமிழ் மக்கள் பொது நிகழ்வுகளில் தேசியக் கொடியை கட்டாயமாக ஏற்றவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டால் விளைவுகள் விபரீதமாகவே அமையும்.

1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தை அப்போதிருந்த பிரதமர் பண்டாரநாயக்க அமுல்படுத்தியதன் விளைவாகவே நாட்டில் இனப்பிரச்சினை பூதாகார வடிவம் எடுத்தது.

இதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பேரழிவுகள், அவலங்கள் எல்லாம் எவராலும் இலகுவில் மறந்துவிடக் கூடியவை அல்ல.

இன்று அதே பண்டாரநாயக்க வம்சத்தில் வந்த ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் – சிங்கக் கொடியைக் கட்டாயமாக்கி இன்னொரு குழப்பத்துக்கான உலை வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் வாழ்விலிருந்து அந்நியப்பட்டுப் போன சிங்கக் கொடியை பொதுநிகழ்வுகளில் கட்டாயம் ஏற்ற வேண்டும் என்று அரசாங்கமோ அல்லது பொலிஸாரோ நிர்ப்பந்திக்க முற்பட்டால் தமிழர் தாயகம் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமென்று எவரும் எண்ணிப்பார்க்க முடியாது.

இப்படி யாராவது சிந்தித்திருப்பார்களேயானால் தமிழ் மக்களின் தேசிய பலத்தை அவர்கள் இன்னமும் புரியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதையே எடுத்துக் காட்டும்.

இந்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை இப்போது அரசாங்கத்துக்கு ஏன் வந்ததென்றே தெரியவில்லை. ஆனால், இது முற்றிலும் தமிழருக்கெதிரான இன்னொரு இன வன்முறைக்கான அடித்தளமாக இருந்தால் கூட ஆச்சரியமில்லை.

அண்மையில் தமிழர் தாயகப் பகுதியில் தமிழீழத் தேசியக் கொடியான புலிக் கொடி ஏற்றுவதில் சர்ச்சைகளைக் கிளப்பி அரசியல் இலாபம் தேட முற்பட்ட சிங்கள பௌத்த இனவாத சக்திகள் இப்போது தமது சிங்கக் கொடியை தமிழ் மக்கள் மீது திணிக்க முற்பட்டிருக்கின்றன.

இந்தத் திணிப்புக்களுக்கெல்லாம் தமிழினம் தலை வணங்காதென்பதை சிங்கள, பௌத்த தேசியவாத சக்திகள் பட்டுத்தான் தெரியவேண்டுமாக இருந்தால் – அது அவர்களின் நலனுக்குத்தான் ஆபத்தானதாக அமையும்.

## நாடும் நடப்பும்




மீள் குடியமர்வு கொடுப்பனவு வழங்கக் கோரி

# வரணி - இயற்றாலை, தாவளை மக்கள் யாழ். அரச செயலகம் முன் மறியல் !

வரணி- இயற்றாலை மக்களும், தாவளை இயற்றாலை மக்களும் மீள் குடியமர்ந்து இரண்டு வருடங்களைக் கடந்துள்ள நிலையில் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து யாழ் செயலக வாயிலுக்கு முன்பாக மறியலில் ஈடுபட்டனர்.

ஒரு வருடத்துக்கு முன்பு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதாக அதிகாரிகள் சிபார்சு செய்தபோதும், தமக்கு இதுவரை மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென அவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி போராட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பிரதிநிதிகள இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் - எம்முடன் மீளக் குடியமர்ந்த சில குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டபோதும், எமக்கு இதுவரை வழங்கப்படவில்லை. இவ்வாறான புறக்கணிப்பு நடவடிக்கைகளால்தான் நாம் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோம். எமது இந்தப் போராட்டத்துக்கு சாதகமான பதில் எதுவும் கிடைக்காதபட்சத்தில தொடர்ந்தும் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தின் காரணமாக யாழ். செயலக நடவடிக்கைகள் நேற்று இரண்டு மணிநேரம் ஸ்தம்பிதம் அடைந்தன. இந்த மக்களுடன் பாரதி சனசமூக நிலையம், வரணி இயற்றாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், வரணி இயற்றாலை கமக்காரர் அமைப்பு ஆகிய அமைப்புக்களும் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டன.

மேற்படி மக்களுடன் கலந்துரையாடிய யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் - வரணி, தாவளை இயற்றாலை மக்கள் தமது மீள் குடியமர்வுக் கொடுப்பனவு தொடர்பாகவும், தமது போராட்டம் குறித்து முன்றிவித்தல் எதுவும் வழங்கவில்லை. எனவே இதுகுறித்து உடன் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசியே இதற்கான தீர்வொன்றை எட்ட முடியும் எனத் தெரிவித்ததையடுத்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

இதனையடுத்து யாழ். செயலகப் பணிகள் காலை 11.30 மணியளவில் வழமைக்குத் திரும்பின. (தீ)

## மதுவரித் திணைக்களத்தினரின் திடீர் சோதனையின் போது 15 லீற்றர் கசிப்பு, கோடா மீட்பு

யாழ். மதுவரித் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு குற்றத்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது 15 லீற்றர் கசிப்பு, 27 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய சில பொருட்கள் என்பவற்றை மீட்டுள்ளனர்.

கோப்பாய், கொக்குவில், யாழ்நகர், முள்ளி ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தபோதும் கசிப்பு உற்பத்தி செய்வதற்குத் தயாரான நிலையிலும் இருந்த நேரங்களிலுமே மதுவரித் திணைக்களத்தினர் குற்றத் தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இவர்களுக்கான குற்றத்தாக்கல் பத்திரத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளனர்.

இதேவேளை, அண்மைக் காலங்களில் பெருந்தொகையான கசிப்புகளை உற்பத்திசெய்ய சேமக்காலைகள், மயானங்களுக்கு அண்மையான இடங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்கள் மீது தாம் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தனர்.

## கொலைச் சந்தேக நபர்களுடனேயே எஸ்.பி திஸநாயக்கவும் தங்கவைப்பு

எம்பிலியப்பிட்டிய கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறையிலேயே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் சிறைச்சாலை அச்சகப் பிரிவிலேயே பணியாற்ற வேண்டும் எனவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவரை அவரது குடும்ப அங்கத்தவர்களும் கட்சி உறுப்பினர்களும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கா நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி விடுத்த வேண்டுகோளை நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன மறுத்துள்ளார். இது [illegible] ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## துரித அபிவிருத்தித் திட்டத்துக்கு பின்தங்கிய கிராமங்கள் தெரிவு

(வலிகாமம்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பின்தங்கிய கிராமங்களாக - பிரான்பற்று, உயரப்புலம், இளவாலை, மாதகல், சகாயபுரம் ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்வதற்கென இந்தக் கிராமங்களின் விபரங்களைப் பிரதேச சபையினர் றீடோ மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமாரிடம் அனுப்பிவைத்துள்ளனர்.

கல்வியை மேம்படுத்த கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் றீடோ அமைப்பினர் மேற்கொள்ளவுள்ளதாக மானிப்பாய் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (91)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அனர்த்த முகாமைத்துவகுழு அமைப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் தேசிய மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவக் குழு ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது.

மாவட்ட மட்ட பிரதிநிதிகள், அரச திணைக்களங்கள் உள்ளடங்கலாக 30 பேர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர். இவர்களுக்கான ஆரம்ப கட்டப் பயிற்சியும், செயலமர்வும் கடந்த மாதம் அநுராதபுரத்தில் நடைபெற்றது. இந்தக் குழுவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைத் தலைவர் வசந்தராஜா கிளிநொச்சி இணைச் செயலாளர் க.கணேஸ் ஆகியோரும் வவுனியா மன்னார் கிளைகளின் நிறைவேற்று அலுவலர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## அசிற் ஊற்றிய சம்பவம் இளைஞன் ஒருவர் கைது

குருநகர் பகுதியைச்சேர்ந்த இராசேந்திரம் கிருபாகரன் என்பவர் மீது 'அசிற்' ஊற்றிக் காயம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்து யாழ். நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கடந்தமாதம் 27 ஆம் திகதியன்று குருநகர் பகுதியில் குறிப்பிட்ட நபர்மீது அசீற் ஊற்றினார் என்ற சந்தேகத்தின் பேரில் இவரை பொலிஸார் கைதுசெய்து நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இவரை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடகிழக்கு மனித உரிமைகளுக்கான செயலகம் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், குடியியல் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச கூட்டு உடன்படிக்கை, இன ரீதியான பாரபட்சத்தின் அனைத்து வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கான அமைப்பு, மனித உரிமைகள் தொடர்பான ஏனைய கருவிகள் ஆகியவை எமது மக்களுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கு பயன்விளைவுள்ள வகையில் பங்களிப்புச் செய்யவில்லை என்பதை உணர்ந்து, தேசிய சர்வதேச ரீதியில் மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவை தொடர்பான அறிவை மேம்படுத்தவும் அவற்றுக்கு மதிப்பளிக்கவும் தனிநபர், குழுக்கள், நிறுவனங்களுக்கு இருக்கும் உரிமையையும் பொறுப்பையும் மனதில் ஏற்று வடக்குக் கிழக்கிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றினால் உருவாக்கப்பட்டது.
வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் NESOHR வடகிழக்கிலுள்ள அனைவரதும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தலை நோக்கமாகக் கொண்டது.

**அதன் செயற்பாடுகள்:**
மனித உரிமை மீறல்கள் தொடர்பான சான்றுகளைச் சேகரிப்பதுடன் அவை தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்துவதற்கும், ஆவணப்படுத்துவதற்குமென இடம் பெயர்ந்தோர் வாழும் முகாம்கள், தடுப்புக் காவல் நிலையங்கள், சிறைச்சாலைகள் போன்றவற்றுக்கு செயலாய்வுக் குழுக்களை அனுப்பும்.

வடகிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அவசர மேல் முறையீடுகள், பத்திரிகைத் தகவல்கள், அறிக்கைகள், வெளியீடுகள் போன்றவற்றை விநியோகிக்கும்.

தேசிய சர்வதேசிய ரீதியிலான வெளியீடுகள், மாநாடுகள், கருத்தரங்குகள், கல்விச் சுற்றுலாக்கள், போன்றவற்றினூடாக தனிநபர்கள், குழுக்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கி அவற்றை வளர்த்தெடுக்கும்.

தகவல்களைப் பெறும்பொருட்டு பரஸ்பர ரீதியில் நன்மையளிக்கும் கூட்டுறவை விருத்தி செய்வதற்கும், வடகிழக்கில் மனித உரிமைக் கலாச்சாரத்தை மதிக்கவும் வளர்த்தெடுப்பதற்குமான செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதற்கும் தேசிய சர்வதேசிய அரச அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை உருவாக்கும்.

**செயலகம் உங்களுக்கு எப்படி உதவும்?**
- எல்லா மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்களையும் ஆய்வு செய்தல்
- இலவச சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல்
- உங்களுக்குத் தேவையான மனித உரிமைகளின் பாதுகாப்பை விசாரித்தறியும் மனிதத்துவத்தை மதித்தல்
- மனித உரிமைகள் பற்றிய கல்வியை வழங்கல்

**நிசோர் பட்டாயத்தின் மூல ஏற்பாடுகள்**
இலங்கைத் தீவின் வடகிழக்கு பகுதியில் வாழுகின்ற எல்லா மக்களது உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் நிசோர் அமைப்பு கடப்பாட்டைக் கொண்டுள்ளது. சர்வதேச மனித உரிமை பிரகடனம், சர்வதேச மனித உரிமைகள் கூட்டமைப்பாளர்கள், ஆபிரிக்க நாட்டின் மனித உரிமைகள் பிரகடனம், பெண்களுக்கெதிரான எல்லாவகையான பாகுபாடுகளையும் ஒழிக்கும் மாநாடு, சிறுவர்களின் உரிமைகளுக்கான மாநாட்டு கருத்துக்களையும், ஐ.நா.வின் குறைந்த அளவிலான கைதிகளின் பராமரிப்பு விதிகளையும் தனது பட்டயத்தில் கொண்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் நல்ல நோக்கத்திற்கான சூழ்நிலையிலும் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்படவோ, செயலிழக்கப்படவோ மாட்டாது. மேலும் மனித உரிமைகள் செயலகம் வடக்குக் கிழக்கில் வாழும் சுதந்திர வேட்கைகொண்ட ஒவ்வொருவரினதும் குடியியல் உரிமைகளை நம்பிக்கையுடனும் எந்த மரியாதையுடனும் பற்றிநிற்கிறது.

குடிசார் அரசியல் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள் போன்ற அடிப்படை உரிமைகள் உள்ளடக்கிய ஐக்கிய நாடுகளால் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமைகளை பாதுகாக்கும் அம்சங்களை மனித உரிமைகள் பட்டயம் உள்ளடக்கியுள்ளது. சிறுவர், பெண்கள் போன்ற குறிப்பிட்ட வகையினர் உரிமைகளைப் பாதுகாக்கும் பணியையும் தம் வேலைத்திட்டத்தில் அடக்கியுள்ளது. அரசியல் உரிமைகள் மட்டுமல்லாது பெண்கள், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் தனது அவசர வேலைத்திட்டத்தில் கொண்டுள்ளது.
வடக்குக்கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகள்

**அரசியல் உரிமைகள்**
1.1 எல்லா மனிதர்களுக்கும் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடவும் தங்களது அரசியல் அபிலாசைகள், சமய நம்பிக்கைகள் உட்ப மனச்சாட்சியில் சரியெனப்பட்டவற்றைத் தெரிவிப்பதற்கும்,
1.2 எல்லா மனிதர்க்கும் சுதந்திரமாக தங்கள் கருத்தையும் நம்பிக்கையையும் தடையின்றி வெளிப்படுத்துவதற்கும்
1.3 எல்லா மனிதர்க்கும் சமாதானமாகக் கூடுவதற்கும் அந்நியோன்னியமாக மற்றவர்களுடன் பழகுவதற்கும்
1.4 எல்லா மக்களும் சுதந்திரமாகத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும்
1.5 எல்லா மனிதர்களும் அரசியலில் பங்குகொள்வதற்கும் அரசியல் கட்சிகளில் இணைவதற்கும் தடையற்ற வகையில் பிரசாரம் செய்வதற்கும்
1.6 காலத்துக்குக் காலம் நடைபெறும் தேர்தல்களில் தாம் விரும்பிய அரசைத் தெரிவு செய்வதற்கும் ஒவ்வொரு மனிதர்களும் தடையற்ற தகுதி பெற்றவர்கள்.
1.7 எல்லா மனிதர்களும் அரச சேவையில் இணைவதற்கும் பதவிகளில் தெரிவுசெய்யப்படுவதற்கும்
1.8 எல்லோரும் அரச அலுவலர்களுடன் தங்கள் குறைகள் தொடர்பில் பரிகாரம் தேடுவதற்கும் மனுவை சமர்ப்பிப்பதற்குமான உரிமை பெற்றவர்கள்.

**உறுதிப்படுத்தப்பட்ட பெண்கள் உரிமைகள்**
2.1 ஆண்களுக்குச் சமமாக கணிக்கப்பட பெண்களுக்கு உரிமையுண்டு
2.2 ஆண்களைப் போன்ற தரத்துடன் ஒத்த அல்லது சமனான நிலைப்பாட்டில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள பெண்களுக்கும் ஆண்களைப்போன்றே ஊதியம் பெற உரிமையுண்டு.
2.3 திருமணத்திலும் பெண்கள் சமமான உரிமையுடையவர்களே.
2.4 சகல வடிவங்களிலும் காணப்படும் சுரண்டுதல்களிலிருந்து தங்களைப் பாதுகாப்பதற்கு பெண்கள் உரித்துடையவர்கள்
2.5 பெண்கள் தொழில் புரியும் காலத்தில் பிள்ளையைப் பிரசவிப்பதற்கு முன்பும் பின்பும் நியாயமான காலத்திற்கு சம்பளத்துடன்கூடிய விடுப்பைப் பெற உரித்துடையவர்கள்
3. உறுதிப்படுத்தப்பட்ட சிறுவர்களின் உரிமைகள்
3.1 எல்லா சிறுவர்களும் பெயரை வைத்துக்கொள்வதற்கு உரித்துடையவர்கள்.
3.2 திருமணப் பிணைப்பில் பிறந்த பிள்ளைகள் அனுபவிக்கும் உரிமைகள் அவ்வாறற்ற பிள்ளைகளுக்கும் உண்டு.
3.3 தொடக்கக் கல்வியை பெறுவதற்கான வழிகளையும் இலவச, கட்டாய ஆரம்பக் கல்வியை உள்ளடக்கிய கல்வியை பெறுவதற்கும் உரித்துடையவர்கள்.
3.4 தொழில் முறைப் பயிற்சிகளையோ ஏனைய தொழில் பயிற்சிகளையோ இலவசமாகப் பெறுவதற்கு உரித்துடையவர்கள்.
3.5 கைது செய்யப்படும் சிறார்களுக்கு புனர்வாழ்வு கோருவதற்கு உரிமையுண்டு.
3.6 புறக்கணிப்பில் இருந்தும் கொடுமைகளில் இருந்தும் சுரண்டல் நிலைகளிலிருந்தும் தங்களைப் பாதுகாப்பதற்கான உரிமையுடையவர்கள்.
3.7 சிறுவயதில் வேலைக்கமர்த்தப்படுவதிலிருந்து விடுபடும் உரிமையுடையவர்கள்.
3.8 விளையாட்டுக்களிலும் பொழுதுபோக்கு நிகழ்வுகளிலும் வாய்ப்புப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள்.
3.9 எல்லா சமூக சேவைகளை ஆற்றுவதற்கும் உரிமையுடையவர்கள்.
3.10 சிறுவர்களுக்குத் தங்கள் எண்ணங்களை அவர்கள் விருப்பத்திற்கேற்ப வெளிப்படுத்துவதற்கு உரிமையுண்டு. இவை சுதந்திரமான தேடுதல் செய்யவும் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கும் பலவிதமான எண்ணக் கருக்களைப் பெறுவதற்கும் எந்த நிலையிலும் விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கும் அவற்றை வாய்மூலமாகவோ, எழுத்துவடிவத்திலோ, வர்ணம் தீட்டல் மூலமோ படம் வரைதல் வாயிலாகவோ அல்லது வேறு சிறுவர்களுக்கான ஊடகங்கள் மூலமோ வெளிப்படுத்த முடியும்.
3.11 இராணுவ சேவையிலோ அல்லது இராணுவப் பிரிவிலோ அல்லது போரிடும் குழுவிலோ இணைக்கப்படாமல் இருப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமையுண்டு.

**வடகிழக்கு மனிதஉரிமைகள் செயலகம்(NESOHR)தனது முதலாவது மனித உரிமைகள் தினத்தை 10/12/2004 அன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி A9 பிரதான சாலையில் அமைந்திருக்கும் இந்துகலாச்சார மண்டபத்தில் கொண்டாடுகின்றது.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க பாதுகாப்பு செயலர் ரம்ஸ்பீல்ட் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம்



இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ரம்ஸ்பீல்ட் - இந்திய உயர் அதிகாரிகளைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

ரமஸ்பீல்ட், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடிய அதேவேளை- பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோர்ஜ் புஷ் இரண்டாவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டபின்னர், அமெரிக்காவிலிருந்து உயர்மட்ட அதிகாரி ஒருவர் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் இருவரையும் சந்தித்தபின்னர் ரம்ஸ்பீல்ட் கருத்துத் தெரிவிக்கையில் - உலகிலேயே உயர்ந்த ஜனநாயகத்தைக் கொண்டநாடு இந்தியா. ஆனால், இந்தியாவின் அச்சம் குறித்த விடயத்தில் நான் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை.

அத்துடன், இரண்டு நாடுகளதும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகவும், ஆனாலும் இது தொடர்பாக மற்றையவர்கள் என்ன நினைப்பார்கள் என்பது தொடர்பாக எனக்குத் தெரியாதெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வாரம் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பை வொஷிங்ரனில் சந்தித்துக் கலந்துரையாடியபோது, அமெரிக்கா எப் - 16 விமானங்கள் 25 ஐ வழங்குமென உறுதியளித்திருந்தார்.



எப் - 16

ஆனால், அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு இந்த விமானங்களை வழங்குமாக இருந்தால், இந்திய - அமெரிக்க உறவுகளில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துமென, ரம்ஸ்பீல்ட் இந்தியாவிற்கு வருவதற்கு ஒருமணிநேரத்திற்கு முன்னர் இந்தியத் தரப்பால் கடுமையான முறையில் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக இந்திய நாடாளுமன்றில் உரையாற்றிய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் - இந்திய-பாகிஸ்தான் பேச்சுக்கள் உணர்வுரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்குவது பேச்சுக்களில் எதிர் விளைவுகளையே தோற்றுவிக்கும் எனத் தெரிவித்தார்.


இதனிடையே இந்தியா சென்றுள்ள ரம்ஸ்பீல்ட், இந்தியத் தலைவர்களுடன் ஆப்கான் மற்றும் ஈராக் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதுடன், ஈரானின் அணு ஆயுதத் திட்டத்தை நிறுத்துவதற்கு இந்தியா உதவி செய்யவேண்டுமெனக் கோருவார் எனவும் அமெரிக்க சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### 700 கி.மீ.சென்று தாக்கும்

# அணுவாயுத ஏவுகணையான ஷாஹீன் 1 பாகிஸ்தான் வெற்றிகர பரிசோதனை!

ஏறத்தாழ 700 கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கும் நடுத்தர வீச்சுக்கொண்ட ஷாஹீன் 1 என்ற அணுவாயுதங்களை தாங்கிச்சென்று இலக்கைத் தாக்கும் ஏவுகணையொன்றை பாகிஸ்தான் வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளதாக அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பரிசோதிக்கப்பட்ட ஷாஹீன் 1 ஏவுகணை இந்தியாவின் முக்கிய நகரங்களைத் தாக்கும் சக்தி கொண்டதாகும். இந்தப் பரிசோதனை நடத்தப்படுவதற்கு முன்னர் இந்தியா உட்பட சகல அண்டை நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டதாக பாகிஸ்தான் அரசு



தெரிவித்தது.

கடந்த ஒன்பது நாட்களில் பாகிஸ்தான் நடத்தும் இரண்டாவது ஏவுகணைப் பரிசோதனை இதுவாகும். அத்துடன் கடந்த மாதத்துடன் சேர்த்து பாகிஸ்தானால் நடத்தப்படும் மூன்றாவது ஏவுகணைப் பரிசோதனை இதுவாகும்.

கடந்த 29 ஆம் திகதி பாகிஸ்தானால் பரிசோதிக்கப்பட்ட ஏவுகணை 290 கிலோ மீற்றரும், 12 ஆம் திகதி பரிசோதிக்கப்பட்ட ஏவுகணை 1500 கிலோமீற்றர் தூரமும் சென்று இலக்குகளைத் தாக்கும் ஆற்றல்கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

### ஐரோப்பிய நாடுகள் மேலதிகமாக

# ஈ-ராக்கிற்கு படைகளை அனுப்ப வேண்டுமாம்!

### கொலின் பவல் தெரிவிப்பு



ஈராக்கில் தமது படைகளை வைத்துள்ள ஐரோப்பிய நாடுகள் மேலும் தமது படைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெல்ஜிய தலைநகர் பிரஸ்லெஸ்ஸில் நடைபெற்ற நேட்டோ நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

ஐரோப்பிய நாடுகள் தமது வேறுபாடுகளை மறந்து அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும். ஐரோப்பிய நாடுகள் இரண்டு அணிகளை வழங்குமாக இருந்தால் இந்த அணிகளை நேட்டோ தலைமையின் கீழ் அனுப்ப நாம் தயாராக உள்ளோம்.

கடந்த நான்கு வருடத்தில் அதிபர் புஷ்ஷின் ஐரோப்பாவுக்கான கொள்கையில் சில முரண்பாடான தீர்மானங்கள் இருந்தன இது விசேடமாக ஈராக்கிற்கும் பொருந்தும்.

எவ்வாறெனினும் கடந்த கால வேறுபாடுகளை மறந்து நாம் தற்போது முன்னோக்கிச் செல்லவேண்டியுள்ளது. இதற்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவு வழங்குமென நாம் நம்புகின்றோம் எனத் தெரிவித்தார்

# மனித உரிமைகள் என்பதன்...

மனித உரிமைகளுக்கும், அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான உலக மதிப்பையும், அனுட்டானத்தையும் மேம்படுத்தலை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கூட்டுறவுடன் முற்றுமுழுதாகச் செயல் நிலைப்படுத்த அங்கத்துவ நாடுகள் சூளுறுதி கொண்டுள்ளதாலும்,

இச் சூளுறுதியைப் பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு, இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய பொது விளக்கமிருத்தல் முக்கியமானதாலும்

பொதுச் சபை இப்பொழுது,

சமூகத்தின் ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு சாதனமும், இப்பிரகடனத்தை இடையறாது மனத்திலிருத்தி, இவ்வுரிமைகள் சுதந்திரங்களுக்கான மதிப்பினை மேம்படுத்துவதற்குக் கற்பித்தல் மூலமும், கல்வி மூலமும், தேசிய, சர்வதேசிய நடவடிக்கைகள் மூலமும் முயலும் நோக்கிற்காகவும் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் மக்களிடையேயும், அத்துடன் தங்கள் நியாயாதிக்கத்தின் கீழ்வரும் ஆள்புலத்து மக்களிடையேயும் இவ்வுரிமைகள், சுதந்திரங்கள் முழுமொத்தமாக வலுவும் பயனுறுதிப்பாடுமுடைய முறையில் ஏற்கப் பெற்று அனுட்டிக்கப்படுவதை நிலைநிறுத்துவதற்காகவும் சகல மக்களும் நாட்டினங்களும் தத தமது சாதனையிலக்கின் பொது நியமமாகக் கொள்ளத்தக்க இந்த அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை வெளிப்படுத்துகிறது.

56 ஆவது சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை அனுஷ்டிக்கும் இன்று (2004.12.10) நாம் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் கூறப்பட்ட பூர்வீகம் என்ற விடயத்தினை கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியமான விடயமாகும்.

இதன்போது ஏன் ஐ.நா. ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது, அதன் நோக்கம் என்ன என்பது பற்றி அறிந்துகொள்வதற்கு நாம் இரு விடயங்கள் பற்றி நோக்க வேண்டியது அடிப்படையாகும். அதாவது மீண்டும் ஓர் உலகமகா யுத்தம் ஏற்படாது இருப்பதனை தடுத்து நிறுத்துதல், மற்றும் சமாதானம் எங்கும் பூரணமாக நிலைத்து நிற்றல் என்பனவேயாகும்.

இவ் விடயம் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், ஐ.நா.ஸ்தாபனத்தின் 56 ஆவது வருட பிரயாணத்தின்போது நாம் ஒப்புக்கொண்டு கூறவேண்டிய விடயம் என்னவென்றால் இன்றுவரை யுத்தம் மூழாது தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதுடன் சமாதான சூழக சூழல் மேலும் பல வழிகளிலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை இன்று 56 ஆவது தடவையாக அனுஷ்டிக்கப்படும் அனைத்துலக மனித உரிமைகள் தினத்தின் போது நாம் ஒவ்வொருவரும் சமாதானம் பற்றி கருத்தில் கொள்வது அவசியமும் எமது கடமையுமாகும். ஏனெனில் இலங்கையின் தற்போதைய நிலையில் நாம் ஒவ்வொருவரும் ஈடுபாட்டுடன் செயற்படுவதோடு சமாதானத்திற்காக உழைக்கவேண்டும். இல்லையேல் சமாதானம் இல்லாத நிலையில் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பது என்பது மிகவும் ஓர் இக்கட்டான நிலையாக அமையக் கூடும்.


# உனது நினைவுகளுடன்...



1988.12.10 அன்று கந்தர்மடம் பகுதியில் இந்திய இராணுவத்தினருடனான மோதலின்போது வீரச் சாவடைந்தார்.

உனது நினைவுகள் சுமந்து...
உன் பணி தொடர்வோம்...

வீர ஜனனம்: 1960.12.28

வீர மரணம்: 1988.12.10

## லெப்.கேணல்.மதி

### சுப்பிரமணியம் பாலச்சந்திரன்

- வலிகாமம் பொது அமைப்புகள்.



# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி அழைப்பும்

மண்ணில் 31 - 05 - 1926



விண்ணில் 20 - 11 - 2004

## திருமதி அன்னலட்சுமி மாணிக்கம்

### (செல்வநாயகம்)

எமது குல தெய்வத்தின் 21 ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்தி கிரியைகளும் இன்று 10.12.2004 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகிறது என்பதனை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகிறோம்.

இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆத்மசாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, புண்ணியதானத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2 ம் ஒழுங்கை,
கைலாயபிள்ளை வீதி,
கச்சாய் றோட், சாவகச்சேரி.
தொ.பே. 0777 852077
0777 6171545

இங்ஙனம்.
மகன் மா.குலேந்திரன் (லண்டன்)
மருமகன் க.உமாமகேஸ்வரன் (அமுது)
மருமகன் சி.கந்தசாமி (கனடா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனநாயக உரிமைகளுக்காகவே நாடாளுமன்றில் எதிர்ப்பு போராட்டம்!

## கூட்டமைப்பு எம்.பி. விளக்கம்

(கொழும்பு)

எமது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே நாடாளுமன்றம் நேற்றுக்கூடியபோது - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனரென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புகள் இன்றி பேரினவாதக் கட்சிகள் இணைந்து பிரேரணைகளை நிறைவேற்றியிருப்பது எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

நேற்றுமுன்தினம் 5 அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீடானது குழுநிலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

இதற்கு வாக்கெடுப்பு தேவையென எமது கட்சி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் அது உதாசீனம் செய்யப்பட்டது.

எமது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே இந்தப் போராட்டத்தை நாம் நடத்தினோம்.

ஐ.தே.க. உட்பட பேரினவாதக் கட்சிகளைப் பொறுத்தவரை ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான சட்டங்கள்கூட இந்தக் கட்சிகளால் வாக்கெடுப்பு இன்றி சபையில் நிறைவேற்றப்படலாம்.

இதன்காரணமாக எமது ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காகவே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் நேற்று அரசியல் விவகார மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது.

ஆதரவாக ஆளும் கட்சியுடன் ஜாதிக ஹெல உறுமய, இ.தொ.கா., சிறீலங்கா மு.கா. உட்பட 106 வாக்குகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 22 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன. ஐ.தே.க. வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்த அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டுவிட்டது.

# இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா!

இராணுவத் தலைமை அதிகாரியாக உள்ள மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்ன இன்று 55 வயதைப் பூர்த்திசெய்யும் நிலையில் இராணு சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

இவருக்குப் பதிலாக புதிய இராணுவத்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நியமிக்கப்படவுள்ளார்.

பிரதித் தலைமை அதிகாரி பதவிக்கு இதனால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை தற்போது தொண்டர் படைகளின் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நிரப்புவார் எனவும் தெரியவருகிறது.

அதிகாரிகளுக்கான பொதுக் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி தொண்டர்படைத் தளபதியாக நியமிக்கப் படவுள்ளார்.

அத்துடன் இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் பலருக்கும் பதவி உயர்வு வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# காணாமற்போனோர் குறித்த வழக்கில் எதிர் மனுதாரர்களை யாழ். நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்த உத்தரவு!

யாழ். குடாநாட்டில் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பான ஆறு வழக்குகள் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன.

சுண்டுக்குளியைச் சேர்ந்த ஏ. வில்ரன், குருநகரைச் சேர்ந்தவர்களான துரைசிங்கம் குணசேகரம், கே. ராஜா, ஆர்.கியூ.ராஜ்குமார், யாழ் நகரைச் சேர்ந்த ஜனார்த்தன் ரவீந்திரன், தேவதாஸ் சுரேஸ்குமார் ஆகியோர் காணாமற்போனமை தொடர்பான வழக்குகளே நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இந்த வழக்குகளின் எதிர் மனுதாரர்களாக குருநகர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, 512 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரி, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல, சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரர்கள் சார்பாகவும், எதிர் மனுதாரர்கள் சார்பாகவும் சட்டத்தரணிகள் தமது வாதங்களை முன்வைத்தனர்.

இந்த இருபக்க வாதங்களையும கேட்ட நீதிபதி - இந்த வழக்குகளின் எதிர் மனுதாரர்களுக்கு எதிராக முதற் தோற்றப்பாட்டிலேயே இம்மனுக்கள்மீது விசாரணைகளை நடாத்தக்கூடியதாகத் தென்படுவதால், வழக்குகளை விசாரித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிவானுக்குப் பணித்துள்ளார்.

மனுதாரர்களை உரியவழக்குத் தவணைகளில் யாழ். நீதிவான் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்குமாறும் நீதிபதி கட்டளையிட்டார்.

## திருமலை நகரில் பாதுகாப்பு தீவிரம்!

திருகோணமலை நகரில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் முக்கிய சந்திகளில் மேலதிக பொலிஸார் காவலுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். சில இடங்களில் இராணுவத்தினரும் பொலிஸாருடன் இணைந்து காவல் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இதேவேளை, மூதூர் இறங்குதுறையில் வைத்து அங்கிருந்து திருகோணமலைக்கு வருகைதரும் பயணிகளின் பொதிகள் கடுமையான சோதனைக்கு பொலிஸாராலும், ஊர்காவல் படையினராலும் உள்ளாக்கப்படுகின்றது. (04)

# யாழ். நகர தீ விபத்து பொலிஸாரிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பஸ்நிலையத்தின் முன் இருந்த புத்தகக் கடையும் ஒலி, ஒளி கலையகமும் திடீரெனத் தீப்பற்றி எரிந்தமை தொடர்பாகக் கடை உரிமையாளர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு ஸ்கைறோஸ் ஒலி, ஒளிப்பதிவுக் கலையகமும், மண்டேலா புத்தக விற்பனை நிலையமும் திடீரெனத் தீப்பற்றி எரிந்த சம்பவம் தொடர்பாக யாழ் பொலிஸாருக்கும், மாநகர சபைத் தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் கிடைத்ததையடுத்து-

அங்கு விரைந்துவந்த தீயணைப்புப் பிரிவினரும், பொலிஸாரும் தீயை அணைக்கும் முயற்சியிலும், தீயை மற்றைய கடைகளுக்குப் பரவவிடாது தடுக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

எனினும் மேற்படி கடைகள் இரண்டிலும் இருந்த பொருட்கள் தீக்கிரையாகின.

இந்தச் சம்பவம் கடை உரிமையாளர்களுக்கு விடியற்காலையிலேயே தெரியுமெனவும், சம்பவத்தை அறிந்து கடையை வந்து பார்த்தபோது, அனைத்தும் எரிந்த நிலையில் காணப்பட்டதாகவும், ஸ்கைறோஸ் ஒலி, ஒளி நிலைய உரிமையாளர் தங்கராசா புவனேஸ், மண்டேலா புத்தக விற்பனை நிலைய உரிமையாளர் சுந்தரம் இன்பகாந்தன் ஆகியோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேற்படி தீவிபத்துச் சம்பவத்திற்கான காரணம் என்ன என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பல்கலைக்கழக...

இந்த வெட்டுப்புள்ளி தொடர்பான விபரங்கள் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். www.ugc.ac.lk என்ற இணையத்தள முகவரியில் இன்று பிற்பகல் நான்கு மணிக்குப் பின்னர் மாணவர்கள் தமது வெட்டுப்புள்ளி விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

தேசியப் பத்திரிகைகளில் நாளை இந்த விபரங்கள் வெளியிடப்படும்.

இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் மாணவர்கள் பல்கலைக்கழங்களுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முதலில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

இந்த ஆண்டில் சென்ற ஆண்டைவிட கூடுதலான எண்ணிக்கையான மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் புதிய பாடநெறிகளும் அறிமுகப்படுத்தப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

## மகேஸ்....

எனது பாதுகாப்பைத் திரும்பப் பெறுவது பற்றி நேற்றுமுன்தினம் இரவு அமைச்சரவை பாதுகாப்பு பிரிவிற்குப் பொறுப்பான பணிப்பாளர் என்னுடன் தொடர்பு கொண்டு உடனடியாக வாபஸ் பெறவேண்டிய நிலையிருப்பதாகத் தெரிவித்தார்.

சிறிது கால அவகாசம் தாருங்கள் எனக் கேட்டபோது மேலிடத்தின் அழுத்தம் காரணமாக உடனடியாக வாபஸ்பெற வேண்டிய நிலை என அந்த அதிகாரி என்னிடம் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்திற்கு நான் கொண்டு வரப்போகின்றேன் என்று அந்த அறிக்கையில் மகேஸ்வரன் தெரிவித்தார்.

# வீட்டில் தனித்திருந்த...

இனந்தெரியாத நபர்கள் மேற்படி பெண்ணை கத்தியால் சரமாரியாகக் குத்தி கொன்றுவிட்டுத் தப்பிச்சென்றதாகத் தெரியவருகிறது.

பாடசாலைக்குத் தனது பிள்ளையை ஏற்றச் சென்ற சகோதரி நண்பகல் 12 மணியளவில் வீட்டுக்குத் திரும்பி வந்து பார்த்தபோது தொலைக்காட்சி இயங்கிக் கொண்டிருந்தது.

ஆனால், தனது சகோதரியைக் காணாமல் தேடிய போது அவர் சமையலறையில் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை கண்டார்.

இதையடுத்து உடனடியாக இரத்த வெள்ளத்தில் கிடந்த பெண்ணை மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து தகவலறிந்த பருத்தித்துறை பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்குச் எவ்ரையும் செல்லவிடாமல் தடுத்து வைத்திருந்தனர்.

பிற்பகல் 3 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் கொலை இடம்பெற்ற இடத்தைப் பார்வையிட்டதுடன் மந்திகை ஆதார வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தையும் பார்வையிட்டார்.

உயிரிழந்த பெண்ணின் கழுத்தில் 5 கத்திக்குத்து காயங்களும், நெஞ்சில் 4 கத்திக்குத்துக் காயங்களும், வயிற்றில் 4 கத்திக்குத்துக் காயங்களுமாக மொத்தம் 13 கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டதாக பிரேத பரிசோதனை நடத்திய மந்திகை ஆதாரவைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கொலைக்குரிய காரணம் குறித்த தகவல் எதுவும் வெளியாகவில்லை. அத்துடன் கொலை நடந்த இடத்தில் எந்தத் தடையப் பொருட்களும் கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

எனினும் இது ஒரு திட்டமிடப்பட்ட கொலையாகவே இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. உயிரிழந்த யுவதியின் சடலம் மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (12,14,20)

## பொலிஸ்...

எடுத்துச்செல்லும்போதே வழியில் மரணமானார். உயிரிழந்த பொலிஸ் கொன்ஸ்டபிளின் சடலம் - மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைகள் மற்றும் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## நிதி...

ஒத்திவைத்து கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினார். இதன் பின்பு சபை கூடியது. தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் விசேட உரையொன்று ஆற்றினார்.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார உரையாற்றுகையில் - ஏற்கனவே கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படியேதான் நேற்றுமுன்தினம் இவ்வாறு நடந்ததாகக் கூறினார். நாடாளுமன்ற நடவடிக்கைகளை சீர்குலைப்பதற்கு இடமளிக்க முடியாது. கட்சி பேதமின்றி [illegible] றும் கூறினார்.

# அரசிடமிருந்து...

இரண்டு வாரங்களாகியும் இந்த அழைப்புக்குரிய பதில் புலிகளுக்கு அனுப்பப்படவில்லை.

ஆனால் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் புலிகளின் அழைப்புக்கு உரிய பதில் நோர்வேயால் வழங்கப்பட்டதாக கூறப்பட்டிருந்த போதும் - இது வரை புலிகளுக்கு எந்தப் பதிலும் அனுப்பப்படவில்லை.

அரசாங்கம் தொடர்ந்தும் ஏமாற்றும் விதத்தில் செயற்பட்டு வருவது மற்றும் பேச்சுக்கான காலத்தை இழுத்தடித்து படைகளைப் பலப்படுத்தி வருவது குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைமை விசனமடைந்திருப்பதாக தெரிவிக்கும் அவர்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் -

இந்த நிலைமை - புலிகளை யுத்தநிறுத்த உடன்பாட்டை தொடர்வதா என்று மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்குள் தள்ளிவருவதாகவும் தெரிவித்தனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை விரிவாகக் கொண்டாடுவதற்கு கிளிநொச்சி இந்து கலாசார மண்டபத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைத்துக்கொள்ளப் படுகின்றனர்.

# மரண அறிவித்தல்

## முருகேசு கந்தையா

நெடுந்தீவு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகேசு கந்தையா 09.12.2004 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி (அதிபர் – மாவிலித்துறை றோ.க. வித்தியாலயம்) காலஞ்சென்ற புஸ்பவதி, தவமணி (ஆசிரியர் – விவேகானந்தாக் கல்லூரி, திருகோணமலை) பராசக்தி (அதிபர் – ஹெற்றிக் சிறுவர் கணினிப் பூங்கா, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ரி.பி.ஜே.தோமஸ் காலஞ்சென்ற மகேந்திரன், புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம் (நல்லொழுக்காற்றுப் போதனா ஆசிரியர் புனித வளான் தொழில்நுட்பக் கல்லூரி திருகோணமலை) இரா.தர்மலிங்கம் (உதவி நிர்வாக உத்தியோகத்தர் - புனித வளான் தொழில்நுட்பக் கல்லூரி திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று நெடுந்தீவு கிழக்கு கட்டுராமன் சல்லி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
இரா.தர்மலிங்கம் (மருமகன்)
12 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

(சி-3454)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இவ்வார பலன்
# 10-12-2004 16-12-2004

| | ராகு | | |
|---|---|---|---|
| யுரே | 10 ப. 12.59 விரு.சந்<br>11 இ. 02.14 கட.சுக்<br>12 ப. 01.07 தனு.சந்<br>14 ப. 12.28 மக.சந் | | சனி |
| நெப் | 15 இ. 07.27 விரு.சூரி<br>16 இ. 12.40 விரு.செவ் | | |
| | சூ,புத | சந், செவ்,<br>சுக், கேது | குரு<br>சுக் |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசிக்காரருக்கு வியாழ சுகம் குன்றியிருப்பதால், குடும்பத்தில் சிறுசிறு பூசல்கள் அவ்வப்போது தோன்றி மறையும். மனைவி, பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். இனபந்துக்களின் வரவு அதிகரிக்கும். வரவிலும் பார்க்கச் செலவு அதிகரிக்கும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படும். வைத்தியச் செலவும் கூடுதலாக இருக்கும். திருமண விடயங்கள் காலந் தள்ளிப் போகும். உத்தியோகத்தர்களுக்கு பொதுவாக நல்ல அபிப்பிராயங்கள் தோன்றும். அதிகாரிகள் உதவுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறைவடையும். எதிர்பார்த்த லாபம் கிடையாது மாணவர்கள் படிப்படியாக முன்னேறுவர்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குரு சஞ்சாரம் நன்மையளிக்கும். குடும்ப வாழ்க்கையில் திருப்தி காணப்படும். மன அமைதி உண்டாகும் இனபந்துக்களின் உதவி கிட்டும். வீட்டில் நற்கருமங்கள் நிகழும். பிள்ளைகள் குதூகலத்துடன் காணப்படுவர். உடல் நலம் சீராக அமையும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்குப் பதவிச் சிறப்புக்கள் கிட்டும், உயர்ச்சியும் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர். கலைத்துறையினர் சிறப்படைவர்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள், பிணக்குகள் அடிக்கடி ஏற்பட்ட வண்ணம் இருக்கும். திடீர் நெருக்கடிகள், செலவுகள் ஏற்படலாம். எடுத்த கருமங்கள் இழுபறியிலேயே இருக்கும். பிரயாணங்களில் அலைச்சல் ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதம் காணும். உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகச் செயற்பாடுகளில் சிக்கல்கள் தோன்றும். பதவி உயர்வுகள் தள்ளிப் போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும். வாடிக்கையாளர்களின் வரவும் குன்றும். மாணவர்களுக்கு சுயமுயற்சி குன்றும். பரீட்சை திருப்தி தராது.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியினருக்கு ஏழரைச் சனியின் தாக்கத்தால் குடும்ப வாழ்க்கையில் சிறு பூசல்கள் தோன்றி மறையும். தொழில் வருமானம் மட்டாகவே இருக்கும். இருப்பினும் எதையும் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவு பெறும். குடும்பப் பெண்கள் சாமர்த்தியத்தால் எதனையும் சமாளித்துக் கொள்வர். திருமணப் பேச்சுக்களும் தாமதத்தையே காட்டுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகமாயினும், அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிட்டும். சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படக்கூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நடந்தாலும், பணவருவாய் குறையும். பழைய கடன்களை வசூலாக்குவது கடினம். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை. வீண்விடயங்களில் சிரத்தை கொள்ளற்க.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியினருக்கு இல்லற வாழ்க்கையில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்களுடன் ஒற்றுமை வலுப்பெறும். புத்திரர்களாலும், நண்பர்களாலும் உதவி உண்டு. பணவருவாய் திருப்தியாக இருக்கும். வெளிநாட்டிலிருந்து திடீர் பணவரவு ஏற்படலாம். தொடங்கும் கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவுபெறும். திருமணங்கள் நிச்சயிக்கப்பட இடமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பும், செல்வாக்கும் அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவும் உண்டு. வர்த்தகத்துறையினருக்கு வியாபாரம் சீராக நடக்கும். வங்கி உதவிகளும் கிட்டும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் உண்டு. சிலருக்கு உயர் கல்வி கிட்டும்.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் ஜனனமானவர்களுக்கு ஜன்மராசியில் வியாழன் சஞ்சரிப்பதால், குடும்ப வாழ்க்கையில் நிம்மதி குறைவாகவே இருக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே கருத்து வேற்றுமைகள் தோன்றும். இனபந்துக்களுடனும், கசப்பு மனப்பன்மை ஏற்படலாம். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். பொருள் வருவாயிலும் பார்க்க செலவு அதிகமாகவே காட்டும். கருமங்கள் கைகூடுவதில் தாமதம் காணும். விவாகப் பேச்சுக்கள் தாமதமாகும். உத்தியோகத்தர்களுக்கு காரியாலயத்தில் பல பிரச்சினைகள் உருவாகும். சக உத்தியோகத்தர்களின் உதவி கிடையாது. வியாபாரிகளுக்கு வருமானம் குறையும். போட்டி வியாபாரிகளால் இடையூறுகள் உண்டு. மாணவர்கள் தேகசுகக்குறைவால் தடுமாற்றம் கொள்வர். சக மாணவருடன் கருத்து வேறுபடலாம்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். புத்திரர்களால் நிம்மதி உண்டு. பணவருவாய் சிறப்பாக அமையும். புத்திரர்களின் முன்னேற்றத்தால் பெற்றோர் மகிழ்ச்சியடைவர். சில இல்லங்களில் சுபநிகழ்வு ஏற்படலாம். தேகசுகம் பாதிப்படையாது. கருமங்கள் தங்குதடையின்றி நிறைவுபெறும். விவாகப் பேச்சுக்கள் தாமதத்தின் பின் நிறைவேறும். உதகியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, பாராட்டுக்கள் கிடைக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுறுசுறுப்படையும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். உயர் கல்வி உண்டு.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியினருக்கு குடும்ப வாழ்க்கையில் இன்பம் பொங்கும். வீட்டில் குதூகலம் அதிகரிக்கும். கணவன் மனைவி உறவு சீராக அமையும். நாளாந்த வருமானம் அதிகரிக்கும். முன்பு இடைநிறுத்தியிருந்த கருமங்கள விரைவில் வெற்றியளிக்கும். தேகசௌக்கியம் நன்று. பிரயாணங்கள் கஷ்டமின்றி அனுகூலமாகும். இடைநிறுத்தப்பட்ட திருமணப் பேச்சுக்கள் தற்போது கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பதவி முன்னேற்றம் உண்டு. பலராலும் கௌரவிக்கப்படுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர்களுக்கு கல்வி வசதிகள் முன்னேற்றங்கள் உண்டு.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



இவர்களுக்கு அட்டமத்தில் சனியும். பத்தில் வியாழனும் நடக்கிறது. குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் தோன்றும். புத திரர்களால் உதவி உண்டு. வரவிலும் பார்க்க செலவு அதிகரித்தே காணப்படும். வீண் செலவும், அலைச்சலும் தவிர்க்க முடியாமல் இருக்கும். எந்தக் கருமத்திலும் தடை ஏற்பட்ட வண்ணமிருக்கும். தெய்வ வழிபாடுகள் பலன்தரும். திருமணப் பேச்சுக்கள் கால வரையறையின்றித் தள்ளப்படும். உத்தியோகத்தர்களுக்கிடையில் வாக்குவாதங்கள் ஏற்படும். அதிகாரிகளும் கடுமையாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாக இருக்கும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். மாணவர்கள் ஊக்கமெடுத்தாலன்றி முன்னேற முடியாது. சோம்பலைத் தவிர்க்கவும்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*




மகரராசிக்காரருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவும். புத்திரர்களால் மகிழ்ச்சியுண்டு. இனபந்துக்களின் வருகையால் வீட்டில் குதூகலம் ஏற்படும். பணவருவாய் திருப்திக்கேற்றவாறு அமையும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படலாம். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றங்கள் ஏற்படலாம். கௌரவம் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சீராக நடக்கும். புதுவாடிக்கையாளர் வந்து சேருவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் பெறுவர். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



கும்பராசிக்காரருக்கு குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் ஏற்படும். செலவுகள் பணவருவாயிலும் பார்க்க மிஞ்சியே இருக்கும். கருமங்களில் அலைச்சலே கூடுதலாக இருக்கும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கக்கூடும். வைத்திய சேவையும் செலவைக் கொடுக்கும். திருமணப் பேச்சுக்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் கூடும். எனினும் அதிகாரிகளின் ஆதரவு உண்டு. சக உத்தியோகத்தர்கள் உதவுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்காது. நட்டத்திலேயே காலம் போகும். முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு கல்வித் தேர்ச்சிகள் திருப்தி தராது.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். இனத்தவர்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். பொருளாதாரம் மேலோங்கும். தொடங்கும் கருமங்கள் வெற்றிதரும். பிரயாணங்களில் திருப்தி நிலவும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். இல்லறம் நல்லறமாக அமையும். உத்தியோகத்தர்களுக்கு விருப்பங்கள் நிறைவேறும். உயர்ச்சி உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். பணவருவாயும், செல்வாக்கும் பெருகும். வாடிக்கையாளர்கள் கூடுவார்கள். மாணவர்களுக்கு பரீட்சை முடிவுகள் மகிழ்ச்சியைத் தரும்.

**மனித உரிமைகள் தினம்**

# மனித உரிமைகள் என்பதன் கருத்து யாது?

**56ஆவது சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ் பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி-ருவன் சந்திரசேகர் வழங்கிய செய்தி**

மனித உரிமைகள் என்பது மனிதனுக்கு உரியதாகும் இயற்கை உரிமைகளாகும்.

மனிதன் எலும்பு தசைகளால் உருப் பெற்றதனால், கழிவுகளை அகற்றுவதால், இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதனால் அவன் உயிரியாக கருதப்படுகின்றான். உயிரியாக இருப்பதனால் அவனுக்கு வாழும் உரிமை உண்டு.

மனிதனின் தொணடையிலுள்ள குரல்வளையின் அதிர்வால் ஏற்படும் ஒலி, மனிதனின் பரிணாமத்துடன் மொழியாக மாறியது. மொழியின் காரணமாக மனிதனுக்கு சமூகத்துடன் தகவல்களை பரிமாறிக் கொள்ள முடிந்தது. இதனால் அவன் சமூக விலங்காக மாறினான். இதனால் மனிதனுக்கு கலாசாரம் என்ற அம்சம் உரியதாகியது. இதன் மூலம் சமூகமடைந்த குழுவாக மாறவே அவனால் முடிந்தது. மனச்சாட்சிக்கு உரிமை கிடைத்து, சமூகத்தில் சமனாகக் கருதப்படவும், கொடூரம், அவமானமின்றி கருதப்படவும் என பல உரிமைகளுக்கு மனிதன் உரியவனானான்.

மேற்கூறிய முறையில் முன் வந்த மனித உரிமை கருத்தியல் 1789இல் ஏற்பட்ட பிரான்ஸ் புரட்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட பிரான்சிய அரசியலமைப்பினுள்ளும் அமெரிக்க புரட்சியுடன் முன்வந்த தோமஸ் ஜெபர்சனால் வரையப்பட்ட 1776-74இல் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்க சுதந்திர சாசனத்தினுள்ளும் மனித உரிமை உரிமைகளாக உள்ளடக்கப்பட்டது.

அதேபோல் பிரித்தானியாவில் அங்கீகரிக்கப்பட்ட மக்னா காட்டா ஒப்பந்தமும், சிரேஸ்ட கருத்தியல் வாதியான ஆபிரகாம் லிங்கனால் முன்வைக்கப்பட்ட சமத்துவம் தொடர்பான கருத்தியலும் மனித உரிமைகளை மேற்கொள்வது தொடர்பாக முக்கிய கடமையாற்றியுள்ளது.

எவ்வாறாயினும் மனித உரிமைகள் எனும் எண்ணக் கருவின் வளர்ச்சி 1945 வரை இல்லாதிருந்ததுடன் 1939இல் ஆரம்பமாகிய இரண்டாவது உலக மகா யுத்தத்துடன் நிகழ்ந்த மனித இனத்திற்கு எதிரான மனித விரோத நடவடிக்கையின் முன் மனித உரிமைகள், கருத்தியலாக மீண்டும் முன்னணிக்கு வந்தது. குறிப்பாக இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு பின்னர் ஜெர்மன் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட யுத்தக் குற்றவாளிகளை விசாரணை செய்யும் விசேட நீதிமன்றத்தின் முன் தேசிய இறைமைக்கு புறத்தே இருக்கும் கருத்தியலாக மனிதனின் மனித உரிமைகளுக்கு மரியாதை செலுத்தலும், அவற்றைப் பாதுகாத்தலும் முக்கியமென சுட்டிக் காட்டப்பட்டது.

1939இல் தொடங்கிய 2ஆவது உலக யுத்த வெற்றியாளர்களாகவும், நேச அணியினராவும் விளங்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ரஸ்யா ஆகியன ஒன்றிணைந்து மீண்டும் உலக யுத்தம் ஒன்று ஏற்படாத வண்ணம் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பமாக 1941இல் அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மற்றும் பிரித்தானிய பிரதமர் சர்ச்சில் ஆகியோர் ஒப்பமிட்டனர். அது தேசிய அரசின் சுயாதீனத்தன்மையின் கருத்தியல் முதன் முறையாக ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியால் அறிமுகம் செய்து வைக்கப்கட்டது.

1942-01-01 அன்று ஐ.நா. சாசனமொன்றை தயாரிக்க நேச நாடுகள் 26 ஒன்றுபட்டன. இக்கூட்டத்தின் முக்கியத்துவம் யாதெனில் உலக அமைப்பின் பெயரளவிலான அமைப்பாக விளங்கிய ஐ.நா அமைப்பு பொருத்தமானது என, அமெரிக்க ஜனாதிபதி யோசனை தெரிவித்ததாகும். 1944இல் பிரித்தானியா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஒன்றிணைப்புக்கு உள்ளாகியதுடன் அது 'டம்பர்டன் எக்ஸ்' கூட்டமர்வு என பிரபல்யம் பெற்றது.

1945 பெப்ரவரி மாதம் பிரித்தானிய பிரதமர், அமெரிக்க ஜனாதிபதி, ரஸ்ய கொம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ஸ்டாலின் ஆகியோர் ரஸ்யாவின் யால்ட்டா நகரத்தில் ஒன்றிணைந்ததுடன் அது 'யால்ட்டா' ஒப்பந்தம் என பிரபல்யமும் பெற்றது. இந்த அனைத்து கூட்டுக்களின் பின்னர் 1945 ஜுன் 26ஆம் திகதி ஐ.நா சாசனம் சம்மதமாகியதுடன் அதற்கென 51 நாடுகள் கையொப்பமிட்டன. அதன் குறிக்கோளாகியது உலக சமாதானம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி எதிர்காலத்தில் மனித குலத்துக்கு தீமை விளைவிக்கும் உலக யுத்தம் தோன்றுவதை விலக்கும் முகமாக செயற்படுவதாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட ஐ.நா. அமைப்பின் முக்கிய குறிக்கோள்களை பிரயோகப்படுத்த மேற்கொள்ள ஐ.நாவின் பொதுச்சபையால் 1948-12-10ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் தொடர்ப்பான அங்கீகாரம் கிடைத்ததுடன் அன்றைய தினம் சர்வதேச மனித உரிமைகள் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. அத்துடன் மனித உரிமைகள் தொடர்பான கருத்தியல்கள் சர்வதேச சட்டங்களாக மாற்றமடைந்தன. அதன் மூலம் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையின் குறிக்கோள்களாக மனிதனுக்குரிய மரியாதை மற்றும் மனிதனுக்குரியதை பிறருக்குரியதாக்க முடியாத சமஉரிமைகளை பாது காக்கும் முக்கியத்துவம் இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இங்கு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் பூர்வீகம் என்பது பற்றி கவனத்தில் கொள்வது முக்கியமான விடயமாகும். இதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது

மனித குடும்பத்தைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும், அவர்கள் யாவரதும் சமமான, பராதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றுக்கு அடிப்படையாகவுள்ளதாலும்.

மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும் அவற்றை அவமதித்தலும், மனுக்குலத்தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தியுள்ள காட்டுமிராண்டித் தனமான செயல்களுக்கு இடமளித்துள்ளதாலும் பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், அச்சத்திலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுதலை ஆகியனவற்றை மனிதன் பூரணமாகத் துய்க்கத்தக்க ஒரு உலகின் வருகையே சாதாரண மக்களின் மிகவுயர்ந்த குறிக்கோளாக எடுத்துச் சாற்றப்பட்டுள்ளதாலும்,

கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்வதற்கு மனிதன் கட்டாயப்படுத்தப்படாமலிருக்க வேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சியால் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அத்தியாவசியமாகவுள்ளதாலும்,

நாடுகளிடையே நட்புறவுகள் ஏற்படுத்தப்படுவதை மேம்படுத்துவது அத்தியாவசியமாகவுள்ளதாலும்.

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த சகல மக்களும், பட்டயத்திலே அடிப்படை மனித உரிமைகளிலும் ஒவ்வொரு மனிதப் பிறவியினதும் கௌரவம், பெறுமதி, ஆண் பெண் சம உரிமை என்பனவற்றிலுமான தமது நம்பிக்கையை மீளவலியுறுத்தி, அதிசுதந்திரச் சூழலில் சமூக முன்னேற்றம், உயர்ந்த வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை மேம்படுத்த துணிந்துள்ளனராதலாலும், (11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இது பிரசுரமாகிறது

# அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

(நேற்றைய தொடர்ச்சி)

**உறுப்புரை 2**

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத்தோற்றம், ஆதனம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி, இந்தப் பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர்.

மேலும் எவருக்கும் அவருக்குரித்துள்ள நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அரசியல், நியாயாதிக்க அல்லது நாட்டிடை அந்தஸ்தின் அடிப்படையில் அது தனியாட்சி நாடாக, நம்பிக்கைப் பொறுப்பு நாடாக, தன்னாட்சியற்ற நாடாக அல்லது வேறேதேனும் வகையில் இறைமை மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இருப்பினும் சரி, வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது.

**உறுப்புரை 3**

வாழ்வதற்கும், சுதந்திரத்துக்கும், பாதுகாப்புக்கும் சகலரும் உரிமையுடையோராவர்.

**உறுப்புரை 4**

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும், அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 5**

எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது.

**உறுப்புரை 6**

ஒவ்வொருவரும் எந்தவிடத்திலும் சட்டத்தின் முன்னர் ஓர் ஆளாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

**உறுப்புரை 7**

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றிச் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையவர்கள். இந்தப் பிரகடனத்தை மீறிப் புரியப்பட்ட பாரபட்சம் எதற்கேனும் எதிராகவும் அத்தகைய பாரபட்சம் காட்டுவதற்கான தூண்டுதல் யாதேனுக்கும் எதிராகவும் எல்லோரும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்.

**உறுப்புரை 8**

அந்தந்த நாட்டின் அரசியலமைப்பால் அல்லது சட்டத்தால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காக, தகுதிவாய்ந்த தேசிய நியாய சபைகளால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்துக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

**உறுப்புரை 9**

ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படலாகாது.

**உறுப்புரை 10**

தமது உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும் தமக்கெதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பற்றியும் தீர்மானிப்பதற்கு சுயாதீனமான, நடுநிலை தவறாத நியாய சபையால் மேற்கொள்ளப்படும் நீதியான, பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

**உறுப்பரை 11**

1. தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும் பகிரங்க விளக்கத்தில் சட்டத்துக்கிணங்க, அவர்கள் குற்றவாளிகளெனக் காண்பிக்கப்படும் வரை, சுத்தவாளிகளென ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். அந்த விளக்கத்தில் அவர்களது எதிர்வாதங்களுக்கு அவசியமான எல்லா உறுதிபபாட்டு உத்தரவாதங்களும் அவர்களுக்கிருத்தல் வேண்டும்.

2. தேசிய, சர்வதேச சட்டத்தின் கீழ் ஏதேனும் செயல் அல்லது செயயாமை தண்டனைக்குரிய தவறொன்றாகக் கொள்ளப்படாதிருந்த பொழுது, புரியப்பட்ட அந்தச் செயல் அலலது செய்யாமை காரணமாக எவரும் ஏதேனும் தண்டனைக்குரிய தவறுக்கான குற்றவாளியாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன், தண்டனைக்குரிய தவறு புரியப்பட்ட நேரததில் ஏற்புடையதாகவிருந்த தண்டத்திலும் பார்க்கக் கடுமையான தண்டம் விதிக்கப்படலாகாது.

**உறுப்புரை 12**

எவரும் அவரது அந்தரங்கத்துவம், குடும்பம், வீடு அல்லது கடிதப் போக்குவரத்து என்பவை சம்பந்தமாக ஒருதலைப்பட்ட மனப்போக்கான தலையீட்டுக்கோ அல்லது அவரது மரியாதை, நன்மதிப்பு என்பனவற்றின் மீதான தாக்குதல்களுக்கோ உட்படுத்தப்படலாகாது. அத்தகைய தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கெதிராக, ஒவ்வொருவரும் சட்டப் பாதுகாப்புக்கு உரிமையுடையவராவர்.

**உறுப்புரை 13**

1.ஒவ்வொரு நாட்டினதும் எல்லைக்குள் சுதந்திரமாகப் பிரயாணஞ் செய்வதற்கும், வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

2. தனது சொந்த நாடு உட்பட ஏதேனும் நாட்டை விட்டுச் செல்லவும், தத்தமது நாட்டுக்குத் திரும்பவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை 14**

1. வேறு நாடுகளுக்குச் செல்வதன் மூலம் துன்புறுத்தலிலிருந்து புகலிடம் நாடுவதற்கும், துன்புறுத்தலிலிருந்து புகலிடம் துய்ப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

2. அரசியற் குற்றங்கள் அல்லாத குற்றங்கள் சம்பந்தமாக அல்லது ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும், தத்துவங்களுக்கும் முரணான செயல்களிலிருந்து உண்மையாக எழுகின்ற வழக்குத் தொடுப்புகள் சம்பந்தமாக இந்த உரிமை கேட்டுப் பெறப்படலாகாது.

**உறுப்புரை 15**

1. ஒரு தேசிய இனத்தவராகவிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

2. எவரதும் தேசிய இனத்துவம் மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதலோ, தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

**உறுப்புரை 16**

1.முழு வயதடைந்த ஆண்களும், பெண்களும் - இனம், தேசிய இனம் அல்லது சமயம் என்பவை காரணமாக கட்டுப்பாடெதுவுமின்றி, திருமணம் செய்வதற்கும் ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணஞ் செய்யும் பொழுதும், திருமணமாகி வாழும் பொழுதும், திருமணம் குலைக்கப்படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமையுண்டு.

2. தம்பதியர்களாக வாழ இருப்போரது சுயாதீனமானதும், முழுமையானதுமான சம்மதத்துடன் மட்டுமே திருமணம் நிறைவேற்றப்படலாம்.

3. குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும், அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும், அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

**உறுப்புரை 17**

1. தனியாகவும், வேறொருவருடன் கூட்டாகவும் ஆதனத்தைச் சொநதமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

2. எவரினதும் ஆதனம் ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதல் ஆகாது.

**உறுப்புரை 18**

சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரமும், போதனை, பயில்நெறி, வழிபாடு, அனுட்டானம் என்பன மூலம் தனது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும், வேறொருவருடன் கூடியும், பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் அடங்கும்.

**உறுப்புரை 19**

கருத்துச் சுதந்திரத்துக்கும், பேச்சுச் சுதந்திரத்துக்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது, தலையீடின்றிக் கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும், எவ்வழிவகைகள் மூலமும் எல்லைகளைப் பொருட்படுத்தாமலும், தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும், பெறுவதற்கும், பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்.

**உறுப்புரை 20**

1. எவருக்கும் சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கும், இணைவதற்குமான சுதந்திரத்துக்கு உரிமையுண்டு.

2. ஒரு கழகத்தைச் சேர்ந்தவராயிருப்பதற்கு எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாது.

**உறுப்புரை 21**

1. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு.

2. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

3. மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இந்த விருப்பானது, காலாகாலம் நடைபெறும் மெய்யான தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இந்தத் தேர்தல் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்குமூலம் அல்லது அதற்குச் சமமான சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

**உறுப்புரை 22**

சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும் சர்வதேச நாட்டிடை ஒத்துழைப்பு மூலமும் ஒவ்வொரு நாட்டினதும் அமைப்பு முறைக்கும். வளங்களுக்கும் இயையவும் ஒவ்வொருவரும் தத்தம் மதிப்புக்கும், தத்தம் ஆளுமையைச் சுதந்திரமான முறை யில் அபிவிருத்தி செய்வதற்கும். இன்றியமையாதவையாக வேண்டப்பெறும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

**உறுப்புரை 23**

1. ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கும், அந்தத் தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், செய்யும் தொழிலில் நியாயமானதும். அனுகூலமுடையதுமான தொழில் நிபந்தனைகளுக்கு உரியோராயிருப்பதற்கும், தொழிலின்மைக் கெதிரான பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவர்.

2. ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

3. வேலை செய்யும் ஒவ்வொருவரும், தாமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியைபான ஒரு வாழ்க்கையை நடத்துவதனை உறுதிப்படுத்தும் நீதியானதும், அனுகூலமானதுமான ஊதியத்துக்கு உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வுதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளால் குறை நிரப்பப்படுவதாயிருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொருவருக்கும் தத்தம் நலன்களைப் பாதுகாப்பதற்கெனத் தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும் அவற்றில் சேர்வதற்குமான உரிமையுண்டு.

**உறுப்புரை 24**

இளைப்பாறுகைக்கும் ஓய்வுக்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவர். இதனுள், வேலை செய்யும் மணித்தியால வரையறை சம்பளத்துடனான காலாகால விடுமுறைகள் அடங்கும்.

**உறுப்புரை 25**

1. ஒவ்வொருவரும் உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவக் கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட, தமதும் தமது குடும்பத்தினரதும், உடனலத்துக்கும், நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்துக்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை. இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கைக்கு வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக்கும் உரிமையுடையவராவர்.

2. தாய்மை நிலையும் குழந்தைப் பருவமும் விசேட கவனிப்புக்கும், உதவிக்கும் உரித்துடையன. சகல குழந்தைகளும் அவை திருமண உறவினுள் பிறந்தவையாயினும் சரி, அத்தகைய உறவின்றிப் பிறந்தவையாயினும் சரி சமமான சமூகப் பாதுகாப்பைத் துய்க்கும் உரிமையுடையன.

**உறுப்புரை 26**

1. ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது தொடக்க அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமானதாயிருத்தல் வேண்டும். தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். தொழில் நுட்பக் கல்வியும் உயர் தொழிற் கல்வியும் பொதுவாகப் பெறப்படத்தக்கனவாயிருத்தல் வேண்டும். உயர் கல்வியானது யாவருக்கும் திறமையின் அடிப்படையில் சமமான முறையில் கிடைக்கக் கூடியதாக இருத்தலும் வேண்டும்.

2. கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுமையாக விருத்தி செய்யவும் மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான மரியாதையை வலுப்படுத்தவும் கூடியதாக ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அது சகல நாடுகளுக்கிடையேயும் இன அல்லது மதக் குழுவினருக்கிடையேயும் மன ஒத்திசைவு, பொறுதியுணர்வு, தோழமை ஆகியவற்றை மேம்படுத்துதல் வேண்டுமென்பதுடன் சமாதானத்தைப் பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளை மேற்கொண்டு செல்லுவதற்குதவவும் வேண்டும்.

3. தமது குழந்தைகளுக்குப் புகட்டப்பட வேண்டிய கல்வியின் வகை, தன்மையை முதலிலே தெரிந்தெடுக்குமுரிமை பெற்றோருக்குண்டு.

**உறுப்புரை 27**

1. சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும் அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

2. அறிவியல் இலக்கிய கலைப்படைப்பை ஆக்கிய கர்த்தா என்ற வகையில், அப்படைப்புக்கள் வழியாக வரும் ஒழுக்க நெறி, பருப்பொருள் நலன்களின் பாதுகாப்புக்கு அத்தகையோர் ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

**உறுப்புரை 28**

இந்தப் பிரகடனத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைளும் சுதந்திரங்களும் முழுமையாக எய்தப்படக்கூடிய சமூக, சர்வதேசிய நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையவராவர்.

**உறுப்புரை 29**

1. எந்த ஒரு சமூகத்தினுள் மாத்திரமே தமது ஆளுமையின் கட்டற்ற பூரணமான வளர்ச்சி சாத்தியமாகவிருக்குமோ, அந்தச் சமூகத்தின் பால் ஒவ்வொருவரும் உரித்துடையவராவர்.

2. ஒவ்வொருவரும் தனது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்கும் பொழுது, இன்னொருவரின் உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்குமுரிய அங்கீகாரத்தையும், மதிப்பையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துக்காகவும், ஜனநாயக சமுதாயமொன்றிலே ஒழுக்கசீலம். பொதுமக்கள் ஒழுங்கமைதி, பொதுச் சேமநலன் எனும் நீதிமுறையான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளும் நோக்கத்துக்காகவும், தனித்துச் சட்டத்தால் தீர்மானிக்கப்படும் வரையறைகளுக்கு மாத்திரமே கட்டுப்படுபவராயமைதல் வேண்டும்.

3. இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் ஐக்கிய நாடுகளின் நோக்களுக்கும் தத்துவங்களுக்கும் முரணாக எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரயோகிக்கப்படலாகாது.

**உறுப்புரை 30**

இந்தப் பிரகடனத்திலுள்ள எவையும், இதன் கண் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றுள் எவற்றையும் அழிக்கும் நோக்கத்தையுடைய ஏதேனும், முயற்சியில் ஈடுபடுவதற்கு அல்லது செயலெதனையும் புரிவதற்கு எந்த ஒரு நாட்டுக்கோ, குழுவுக்கோ அல்லது ஒருவருக்கோ யாதேனும் உரிமையை அளிக்கும் உட்கிடையைக் கொண்டுள்ளதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது. ❐

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org